வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 01.12.2021 புதன்கிழமை | இதழ் : 361 | பக்கங்கள் : 16




## எரிவாயு சிலிண்டர்களால் வெடிப்புகள்


# பதற்றத்தில் நாடு

### இரு நாட்களில் 21 சம்பவங்கள்



கொழும்பு, டிசெம்பர் 01

எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் அடுப்புகள் வெடிக்கும் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இதனால், நாடு முழுவதும் பெரும் பதற்ற நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில், கடந்த இரு நாட்களில் மட்டும் நாடு முழுவதும் 21 வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. 15



## தொற்றால் 18 பேர் பலி!

கொழும்பு, டிசெ. 01

கொரோனா தொற்று காரணமாக நாட்டில் நேற்றுமுன்தினம் 18 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

இதன்படி, 30 - 59 வயது பிரிவை சேர்ந்த 4 ஆண்களும், 3 பெண்களுமாக 7 பேரும், 60 வய 15

## எரிவாயு சிலிண்டர் வெடிப்பு; ஆராய எண்மர் குழு நியமனம்!

கொழும்பு, டிசெ. 01

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்று வரும் எரிவாயு விபத்துக்கள் தொடர்பான அறிக்கைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை முன்வைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 15

## சிலிண்டர் வெடிப்பு தொடர்பில் ஆராய இன்று அவசர குழுக் கூட்டம்

கொழும்பு, டிசெ. 01

எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு அவசர ஆலோசனை உப குழுக் 15



மாதகலில் காணி சுவீகரிப்புக்கு எதிராக மக்கள் போராட்டம் இடம்பெற்றபோது கைகளில் கொட்டன்களுடன் கடற்படையினர் நடமாடினர். (செய்தி 2ஆம் பக்கத்தில்)

## யாழ். மாநகர சபை அமர்வு செங்கோலுடன் ஆரம்பம்!



யாழ்ப்பாணம், டிசெ. 01

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரலாற்றில் முதல் தடவையாக செங்கோலுடன் நேற்று 15

## சீன கடன்பொறி என்பது மேற்குலகின் கற்பிதம்!

### சீனத் தூதரகம் இப்படி விளக்கம்

கொழும்பு, டிசெ. 01

உகண்டாவின் விமான நிலையம் சீனா வசமான தாக வெளியான செய்திகள் முற்றிலும் பொய்யானவை. எனத் தெரிவித்துள்ள சீனத் தூதரகம், "கடன் 15

## தேவையின்றி வெளியேறாதீர்கள்! புதிய கட்டுப்பாடுகள் நடைமுறை

கொழும்பு, டிசெ. 01

குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சக பணியாளர்களுக்கு நோய் பரவும் அபாயத்தை குறைக்கும் வகையில், தேவையில்லாமல் வீடுகளை விட்டு வெளி 15

## இந்திய பாதுகாப்பு அமைச்சருடன் மிலிந்த மொறகொட முக்கிய பேச்சு

புதுடில்லி. டிசெ. 01

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கை புதுடில்லிக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொட புதுடில்லியில் நேற்று சந்தித்துப் பேசியுள்ளார்.

இரு தரப்பு பாதுகாப்பு கூட்டறவு தொடர்பாகவே இச்சந்திப்பின் 15

## தமிழ் மக்களுக்கான உரிமைகள் கிடைக்கும்வரை போராட தயார்!

### பிரிட்டனின் 3 எம். பிக்கள் உறுதி

லண்டன், டிசெ. 01

இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச சட்டங்களுக்கு முரணான குற்றங்கள் தொடர்பில் தற்போது வரை எந்தவொரு நபரும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை. மனித உரிமைகள் மீறல்கள் அங்கு வழக்கமானவையாக மாறியிருக்கின்ற சூழ்நிலையில், தமிழ் மக்களுக்கான நீதி மற்றும் மனித உரிமைகள் என்பன உறுதிசெய்யப்படும் வரையில் அதற்காகத் தொடர்ந்து போராடத் தயா 15

## வடக்கில் 73 வீதமான சுகாதார உதவியாளர்கள் பற்றாக்குறை

### பாராளுமன்றில் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 01

யாழ் போதனா வைத்தியசாலையில் 657 தாதியர் தேவை உள்ள நிலையில் 573 தாதியர்களே பணியில் உள்ளனர். அவர்களிலும் 50 தாதியர்கள் தினமும் விடுமுறையில் உள்ளனர். மேலும் 73 பேர் இடமாற்றத்தில் உள்ளனர். எனவே 135 புதிய மற்றும் அவசரமான தாதியர் நியமனங்கள் தேவைப்படுவதாக தெரிவித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட 15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## தமிழ் மக்களுக்கான...

ராக உள்ளனர் பிரிட்டனின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

சியோபெய்ன் மெக்டொனாக், கெரெத் தோமஸ், ஸ்டீவ் பேக்கர் ஆகியோர் மாவீரர்நாளை முன்னிட்டு காணொலி மூலம் வெளியிட்டுள்ள செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் சியோபெய்ன் மெக்டொனாக் கூறுகையில்,

இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச சட்டங்களுக்கு முரணான குற்றங்கள் தொடர்பில் தற்போதுவரை எந்தவொரு நபரும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை. இலங்கைத் தமிழ் சமூகத்திற்கு எதிராக அரசாங்கத்தினால் இழைக்கப்பட்ட படுகொலைகள் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பில் நீதியை அடைந்துகொள்வதற்கான முயற்சிகள் தற்போது சர்வதேசத்தை நோக்கி நகரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்கான மிகச்சிறந்த வாய்ப்பை அண்மைய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் வழங்கியிருக்கின்றது.

நல்லிணக்கத்திற்கான பாதையைக் கடப்பதற்கு எந்தளவு தூரம் இருந்தாலும், இலங்கைத் தமிழ் மக்களுக்கான நீதி மற்றும் மனித உரிமைகள் என்பன உறுதி செய்யப்படும் வரையில் நாம் அதற்காகத் தொடர்ந்து போராடுவோம் - என்றார்.

கெரெத் தோமஸ் எம். பி. கூறுகையில், “மாவீரர்நாள் என்பது 2009 ஆம் ஆண்டில் இலங்கையில் முடிவிற்குக் கொண்டுவரப்பட்ட போரின் பல்வேறு கசப்பான சம்பவங்களை நினைவுபடுத்துகின்றது. இருப்பினும் நீண்டகாலப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னரும் இலங்கைவாழ் தமிழ்மக்கள் தொடர்பான நகர்வுகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் வழக்கமானவையாக மாறிவிட்டன. குறிப்பாக 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட மிகமோசமான சம்பவங்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் தண்டனையிலிருந்து தப்பிக்கும் கலாசாரம் தற்போதும் தொடர்கின்றது என்று சுட்டிக்காட்டினார்.

ஸ்டீவ் பேக்கர் எம். பி. பேசுகையில்,

இலங்கையில் இடம்பெற்ற அடக்குமுறைகளுக்கும் வன்முறைகளுக்கும் முகம் கொடுத்த அனைத்துத் தமிழர்களையும் நினைவுகூருகின்றோம். போரின்போது ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். மேலும் பலருக்கு என்ன நேர்ந்தது என்பதே தெரியாமல் போயிருக்கின்றது.

போரில் உயிரிழந்தவர்களை எவ்வித தடைகளுமின்றி நினைவுகூருவதென்பது மிகவும் முக்கியமானதாகும். ஆனால்ஈ அது அனைத்து சந்தர்ப்பங்களிலும் சாத்தியப்படாமை பெரிதும் விசனமளிக்கின்றது - என்றார். (ஐ)

## யாழ். மாநகர...

சபையின் அமர்வு முதல்வர் மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இந்த செங்கோல், முதல்வர் வி. மணிவண்ணனின் வேண்டுகோளுக்கு அமைவாக - அண்மையில் காலமான நல்லூர் கந்தசுவாமி கோவிலின் 10ஆவது நிர்வாகி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் நினைவாக ஆலயத்தால் வழங்கப்பட்டது.

ஆலயத்தின் 11ஆவது நிர்வாகியும் பிரபல கட்டட வடிவமைப்பாளருமான சயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியாரால் வடிவமைக்கப்பட்டு இந்த செங்கோல் உருவாக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேவையின்றி...

யேறுவதைத் தவிர்க்குமாறு சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் எஸ். சிறீதரன் அறிவித்துள்ளார்.

நேற்று நள்ளிரவு 12 மணி முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு விடுக்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டுதல்களிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் அறிவித்துள்ளார்.

திருமண மண்டபங்களில் அவற்றின் திறனில் ஒன்றில் மூன்று பங்குக்கு மிகாமல் அதிகபட்சம் 200 பேருக்கு மிகாமல் திருமண வைபவங்களை நடத்த முடியும் என்றும் திறந்தவெளி எனின், 250 பேர் அனுமதிக்கப்படுவர்.

உணவகங்களில் அவற்றின் திறனில் ஒன்றில் மூன்று பங்குக்கு மிகாமல் அதிகபட்சம் 100 பேர் உள்ளிருந்து உணவருந்த அனுமதிக்கப்படுவர். திறந்த வெளியாயின் 150 பேர் அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சிலிண்டர் வெடிப்பு...

கூட்டம் இடம்பெறவுள்ளது. இதற்கான அறிவிப்பை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் விடுத்தார்.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

இதனையடுத்து எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு தொடர்பில் கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ணவிடம் கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண பதிலளித்த நிலையில் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக அவசர ஆலோசனை உப குழுக் கூட்டத்தை கூடிடலாம் என்ற யோசனை சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனவினால் முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்தே எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு அவசர ஆலோசனை உப குழுக் கூட்டத்தை கூட்டுமாறு சபாநாயகர் அறிவித்ததுடன் இக்கூட்டத்தில் பங்கேற்குமாறு கட்சி தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

இதேவேளை எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பது தொடர்பில் அவசர ஆலோசனை உப தெரிவுக்கு செயல்குழு ஒன்றையும் அமைக்குமாறு எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

## எரிவாயு...

குழு ஒன்றை நியமித்துள்ளார். வர்த்தக மற்றும் விற்பனை நிலையங்களில் எரிவாயு சிலிண்டரால் ஏற்படும் தீ விபத்து மற்றும் வெடிப்புகள் ஏற்படுகின்றமைக்கான காரணங்கள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வுகளை முன்வைக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஷாந்த வல்பலகேவின் தலைமையில் 8 பேர் அடங்கிய இந்த நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதில், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அஜித் டி சில்வா, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டபிள்யூ. டி. டபிள்யூ. ஜெயதிலக, பேராசிரியர் பிரதீப் ஜெயவீர, இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசிரியர் நாராயண் சிறிமுத்து, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுதர்ஷன சோமசிறி, இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவகத்தின் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் சுஜீவ மஹகம ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ஐ)

## இந்திய பாதுகாப்பு...

போது முக்கியமாகப் பேசப்பட்டதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை எதிர்காலத்தில் மேம்படுத்துவது தொடர்பில் இதன்போது முக்கியமாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## வடக்கில்...

எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ,வடக்கில் 73 வீதமான சுகாதார உதவியார்கள் பற்றாக்குறையும் காணப்படுவதால் இதனையும் உடனடியாக பூர்த்திசெய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சுகாதார அமைச்சு மற்றும் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கோரிக்கை அவர் மேலும் கூறுகையில்,

யுத்தத்திற்கு பின்னர் பாரிய பின்னடைவுடன், மெதுவான அபிவிருத்திகளை எமது பகுதிகள் சந்தித்து வருகின்ற நிலையில் வடக்கின் சுகாதார சேவைகள் குறித்து அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதுடன் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட எமது பகுதிகளில் எமது மக்களுக்கான சுகாதார மருத்துவ சேவைகளை முன்னெடுக்கும் சுகாதார தரப்பினருக்கு எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

வடக்கின் மிகவும் முக்கியமான வைத்தியசாலையாக யாழ். போதனா வைத்தியசாலை உள்ளது, வடக்கிற்கு மட்டும் அல்ல, ஏனைய பகுதிகளுக்கும் இது முக்கியமான வைத்தியசாலை . ஆனால், யாழ். போதனா வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு வசதிகள் மோசமான நிலையில் உள்ளன . குறிப்பாக வைத்தியசாலையின் பிரசவ விடுதிக்கான தேவையுள்ளது. தற்போதுள்ள பிரசவ விடுதி மிக மோசமான நிலைமையில் காணப்படுகின்றது. அபிவிருத்தி செய்யாது தற்காலிக ஏற்பாடுகளை மட்டுமே இதில் முன்னெடுத்து வருகின்றனர். இதனால் 50 வீதத்திற்கும் அதிகமாக கர்ப்பவதி பெண்கள் சிரமங்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

மேலும் தாதியர் பற்றாக்குறை குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆலோசனை வைத்தியர்கள், மருத்துவர்கள் போன்றே தாதியர் தேவையும் அவசியம். இன்று யாழ் போதனா வைத்தியசாலையில் 657 தாதியர் தேவை இருந்தும் 573 தாதியர்களே பணியில் உள்ளனர். அவர்களிலும் 50 தாதியர்கள் எந்த நேரமும் விடுமுறையில் உள்ளனர், மேலும் 73 பேர் இடமாற்றத்தில் உள்ளனர். எனவே 135 புதிய மற்றும் அவசரமான தாதியர் நியமனங்கள் தேவைப்படுகின்றன. தேவைப்பாடு அடிப்படையில் பார்த்தாலும் கூட 1200 தாதியர்கள் தேவைப்படும், எனவே குறைந்தபட்சம் 300 தாதியர்களையேனும் அதிகரிக்க வேண்டும்.

வைத்தியர்களை பொறுத்தவரை 175 வைத்திய ஆலோசகர்களே உள்ளனர், ஆனால் 300 பேருக்கான வெற்றிடம் உள்ளது. எனவே இதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

யாழ். போதனா வைத்தியசாலையை பொறுத்தவரையில் யுத்த காலத்தில் தன்னார்வ வைத்திய சேவையாளர்கள் பலர் இருந்த போதிலும் தற்போது வடக்கை பொறுத்தவரையில் 73 வீதமான சுகாதார உதவியாளர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது. எனவே இதில் இனியும் காலதாமதம் செய்து நியமனங்களை முன்னெடுக்க வேண்டும்.

வடக்கை பொறுத்தவரை 117 வைத்தியசாலைகள் உள்ள போதிலும், இவற்றில் 15 வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லை. அதேபோல் 41 வைத்தியசாலைகளில் மட்டுமே தாதிய அதிகாரிகள் உள்ளனர். ஏனைய பல குறைபாடுகள் உள்ளன. இதில் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால், முக்கியமான சில வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு செல்ல வேண்டும் என வைத்தியர்கள் மற்றும் மக்கள் விரும்புகின்றனர். ஏனென்றால் மத்திய அரசின் கீழ் வைத்தியசாலைகள் இயங்கும் நேரத்தில் பாரிய நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுவதுடன் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதே அஅந்த விருப்பத்துக்கான காரணம்.

மாகாண சபைகளின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளை கைவிட்டு மத்திய அரசின் கீழ் இயங்குவதை வைத்தியசாலைகள் கவனத்தில் கொள்வது நியாயமான செயற்பாடாக நாம் கருதவில்லை. அதேபோல் யாழ். போதனா வைத்தியசாலை மாகாண அதிகாரத்தின் கீழ் இயங்கினாலும் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் சேவைகள் குறித்தும் அரசு கவனம் செலுத்த வேண்டியது அவசியம் - என்றார்.

## தொற்றால்...

துக்கு மேற்பட்ட 7 ஆண்களும் 4 பெண்களுமாக 11 பேரும் தொற்றால் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் உயிரிழந்த 18 பேருடன் சேர்த்து கொரோனா தொற்றால் நாட்டில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 346ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

## சீன கடன்பொறி...

பொறி“ என்பது முற்றுமுழுதாக மேற்குலக காலனித்துவத்தால் கட்டமைக்கப்பட்ட கருத்தியல் என்றும் தெரிவித்துள்ளது.

உகண்டா அரசாங்கம் சீனாவிடம் பெற்ற கடனை மீளச்செலுத்தமுடியாத நிலையிலிருப்பதால், அந்த நாட்டுக்கு சொந்தமான ஒரேயொரு சர்வதேச விமான நிலையமும் தற்போது சீனாவின் வசமாகியிருக்கிறது என்று அண்மையில் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இது குறித்து உகண்டா சிவில் விமான சேவை அதிகார சபையின் ஊடகப்பேச்சாளர் வியன்னே எம். லுக்யா அவரின் உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தின் ஊடாக விளக்கமளித்திருந்தார். அவரின் பதிவை மேற்கோள்காட்டியே இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் அதன் உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் கடந்த 2017 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு வழங்குவதன் ஊடாக அதற்குத் தேவையான டொலரைத் திரட்டுவதற்குத் தீர்மானித்தபோது, மேற்குலகின் “கடன் பொறியிலிருந்து“ இலங்கையை சீனா பாதுகாத்ததாகவும் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## பதற்றத்தில் நாடு...

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை தொடக்கம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி வரையே இந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்றைய தினம், நுவரெலியா மாவட்டத்தில் ஹற்றன், கொட்டகலை பகுதிகளிலும், கொழும்பு மாவட்டத்தில் பாதுக்கை, ஹன்வெல்லை பிரதேசங்களிலும், கம்பஹா மாவட்டத்தில் ஜா - எலவிலும், கேகாலை மாவட்டத்தின் நகரப் பகுதிகளில் 6 சம்பவங்கள் பதிவாகின. அத்துடன், திங்கட்கிழமை நாடு முழுவதும் 15 சம்பவங்கள் பதிவாகின.

நுவரெலியாவில் கொட்டகலை - பத்தனை பகுதியில் வீடு ஒன்றில் தண்ணீரை கொதிக்க வைத்த பெண், தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோது அடுப்பு பெரும் சத்தத்துடன் வெடித்துள்ளது. இதைத் தொடர்ந்து சிலிண்டரில் நெருப்பு பரவ ஆரம்பித்தபோது அங்கிருந்தவர்களால் அணைக்கப்பட்டது.

ஹற்றனில் உணவகம் ஒன்றிலேயே அடுப்பை பற்ற வைத்த சமையலாள் பொருள் எடுப்பதற்காக விலகிச் சென்றபோது இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் தீ பரவியது. எனினும், அங்கிருந்தவர்களால் தீ மேற்கொண்டு பரவாமல் தடுக்கப்பட்டது.

ஹன்வெல்லையில் புதிதாக வாங்கிய சிலிண்டரை அடுப்புடன் இணைத்தபோது அடுப்பு வெடித்ததாக பெண் ஒருவர் தெரிவித்தார்.

எனினும், இந்த சம்பவங்கள் எவற்றிலும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. அனைத்து வெடிப்புகளும் லிற்றோ எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பானவையாகவே இருந்தன என்று பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (ஐ)









# கடற்படைக்குக் காணி அபகரிப்பது மாதகல் கிழக்கில் தடுத்து நிறுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 01

மாதகல் கிழக்குப் பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளை சுவீகரிக்கும் முயற்சி நேற்று தடுத்து நிறுத்தப்பட்டது.

மாதகல் கிழக்கு ஜே/150 கிராம உத்தியோகத்தர் பிரிவு, குசுமந்துறையில் தனியாருக்கு சொந்தமான ஒரு பரப்புக் காணியை கடற்படையினரின் தேவைக்கு சுவீகரிப்பதற்காக நில அளவை திணைக்களத்தினால் நேற்று அளவீட்டுப் பணி முன்னெடுக்கப்படவிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் கடற்படையினர் தமது வீட்டுக்கு வந்து காணியை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்து கையொப்பம் வைக்குமாறு கேட்டனர் எனக் காணி உரிமையாளர் தெரிவித்தார்.

அளவீட்டுப் பணியை தடுத்து நிறுத்துவதற்காக குறித்த இடத்தில் ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது கடற்படையினர் கொட்டான்களுடன் குவிக்கப்பட்டு , மக்களை அச் சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.

காணியை அளப்பதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டதை அடுத்து அளவீட்டு நடவடிக்கைகளை தற்காலிகமாக கைவிட்டு நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்விடத்தில் இருந்து அகன்றனர்.

தொடர்ந்தும் அரசியல் பிரமுகர்கள் மற்றும் கிராம மக்கள் கடற்படை முகாமுக்கு முன்பு அமர்ந்து இருந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியதை அடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த இளவாலை பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் கலந்துரையாடினர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எதிர்வரும் இரண்டாம் திகதி சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் அழைந்து கலந்துரையாடுவதாக வாக்குறுதி வழங்கியதை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட வர்கள் அங்கிருந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# எரிவாயு சிலிண்டர் வெடிப்பு அரசாங்கத்தின் சதித்திட்டம்

## எதிர்க்கட்சி சந்தேகம்

கொழும்பு, டிசெ. 01

எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவம், இந்தியாவில் இருந்து எரிவாயு சிலிண்டரை கொண்டு வருவதற்கான திட்டமாக இருக்கலாம் என எதிர்க்கட்சி உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறுகிய தினங்களில் இந்தளவு எரிவாயு சிலிண்டர்கள் வெடித்தது தொடர்பில் நாங்கள் இதற்கு முன்னர் கேள்விப்பட்டதில்லை. இந்த பிரச்னையில் இருந்து அரசாங்கம் விலகிச்செல்லாமல் முறையான தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை, நாங்கள் 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வரும் போது எரிவாயு விலை 2 ஆயிரத்து 313 ரூபாயாக இருந்தது. அதனை நாங்கள் ஆயிரத்து 342 ரூபாய்க்கு குறைத்தோம். ஆனால் அரசாங்கம் எரிவாயு விலையை 2ஆயிரத்து 675 ரூபாய் வரை அதிகரித்திருக்கின்றது.

எரிவாயு சிலிண்டர் வெடிப்பதிலும் சதித்திட்டம் இருக்க வேண்டும் என்றே தோன்றுகின்றது. இதற்கு காரணம் ஆட்சியாளரின் புதல்வர் ஒருவரின் பெயரில் இந்தியாவில் இருந்து எரிவாயு சிலிண்டரை கொண்டுவர திட்டமிட்டு வருவதாக தகவல் கசிந்துள்ளது-என்றார். (அ)

# சம்பிக்க உட்பட மூவருக்கு எதிரான விசாரணை நாளை

கொழும்பு, டிசெ. 01

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் திகதியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, இவ்வழக்கை நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

2016 ஆம் ஆண்டு இராஜகிரிய பகுதியில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, அவரது சாரதியாக பணியாற்றிய துசித்தகுமார மற்றும் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி சுதத் அஸ்மடல ஆகியோருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

## கல்வி TV CHANNEL-1

**01.12.2021**

**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி TV CHANNEL - 2

**01.12.2021**

**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
01.12.2021 புதன்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 15

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## உகண்டா படிப்பினை?

இலங்கையை மேற்குலக கடன்பொறியிலிருந்து தாமே மீட்டுள்ளதாக - இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்திருக்கின்றது. சீனா கடனுதவியை வழங்காதிருந்திருந்தால், இலங்கை மேற்குலக கடன்பொறிக்குள் எப்போதோ சிக்குண்டிருக்கும் என்றும் குறித்த தூதரக செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இலங்கைக்கான சீனத் தூதரகம் இவ்வாறானதொரு செய்தியை வெளியிட்டிருக்கும் சம நேரத்தில், ஆபிரிக்க நாடான உகண்டா - அதனிடமிருந்த, ஒரேயொரு சர்வதேச விமான நிலையத்தையும் சீனாவிடம் இழந்திருப்பதாக சர்வதேச ஊடகங்களில் செய்தியொன்று வெளியாகியிருக்கின்றது.

சீனாவிடம் வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத நிலையிலேயே உகண்டா - அதன் சர்வதேச விமான நிலையத்தை இழந்திருக்கின்றது. சீனாவிடம் வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத சூழலிலேயே 2017இல், இலங்கை அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு வழங்கியிருந்தது. அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம், சீனாவின் கடன்பொறி இராஜதந்திரத்திற்கான உதாரணமாக சர்வதேச அளவில் நோக்கப்படுகின்றது. ஆனால், இதனை மறுத்துவரும் சீனா - தாங்களே, மேற்குலக கடன்களிலிருந்து இலங்கையை பாதுகாத்ததாகக் கூறுவருகின்றது.

பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சராக பொறுப்பேற்ற பின்னணியில், இந்தியாவினுடனான பொருளாதார உறவுகளை பலப்படுத்தும் முயற்சிகளில் பஸில் ஈடுபட்டு வருகின்றார். ஏற்கனவே, உரக் கொள்வனவு தொடர்பில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. இதன் விளைவாக சீனத் தூதரகம், இலங்கையின் அரச வங்கிகளில் ஒன்றான மக்கள் வங்கியை கறுப்பு பட்டியலில் சேர்த்திருந்தது. இன்னும் அதனை சீனா நீக்கவில்லை. இந்த நிலையில், ஆரம்பத்தில் முரண்டுபிடித்த அரசாங்கம், பின்னர் மூன்றாம் தரப்பின் ஊடாக சீன உரத்தை பரிசோதிப்பதற்கு இணங்கியிருந்தது.

உண்மையில் இந்த விடயத்தில் சீனா அதன் பலத்தை பிரயோகித்து கொழும்பை கீழிறங்கச் செய்தது என்பதுதான் உண்மை. இதன் காரணமாகவே ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் உள்ளிட்டோர் சீனா தொடர்பில் வாய்திறக்கவில்லை. இந்திய தூதரகமோ அல்லது அமெரிக்க தூதரகமோ இவ்வாறானதொரு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தால் சிங்கள - பௌத்த சக்திகள் கூக்குரலிட்டிருக்கும். தெருவுக்கு வந்திருக்கும். ஆனால், சீனா என்பதால் ஆழ்ந்த அமைதி காக்கின்றனர்.

நெருக்கடியிலிருந்த பல ஆபிரிக்க நாடுகளுக்குள், சீனா பெரியளவில் ஊடுருவியிருக்கின்றது. சீனா ஊடுருவியிருக்கும் நாடுகள் அனைத்திற்குமிடையே ஓர் ஒற்றுமையுண்டு. அதாவது, இந்த நாடுகள் அனைத்துமே மனித உரிமைகள் சார்ந்த குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கும் நாடுகள். மேற்குலக நாடுகள் மத்தியில் விமர்சனங்களை எதிர்கொண்டுவரும் நாடுகள். இந்த இடைவெளியையே சீனா பயன்படுத்திக் கொண்டது. இலங்கையிலும் இதுதான் நடந்தது. இலங்கைமீது மேற்குலக நாடுகள் மனித உரிமைகள் சார்ந்து குற்றச்சாட்டுக்களை முன்வைத்தபோது - இலங்கைக்கு ஆதரவான ஆபத்பாந்தவன் போன்று சீனா களத்தில் குதித்தது.

இது இலங்கையின் உள்விவகாரம் இதற்குள் தலையீடு செய்ய வேண்டாமென்று கூறியது. சர்வதேச அரங்குகளில் இலங்கைக்கு ஆதரவாகத் தன்னை முன்னிறுத்திக் கொண்டது. இதன் மூலம் கொழும்புடன் நெருங்கியது. இந்த நெருக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டே, இலங்கையின் பொருளாதார தேவைகளுக்கு உதவியது. இந்த பின்புலத்தில்தான், அம்பாந்தோட்டை பின்னர் துறைமுக நகரத்திட்டம் ஆகியவற்றை சீனா சாதித்துக் கொண்டது. சீனாவிடம் பெறும் கடன்கள் அதிகரிக்கின்றபோது, என்ன நடக்கும் என்பதற்கு பல ஆபிரிக்க நாடுகள் உதாரணமாக இருக்கின்றன. இதற்கு உகண்டா ஒரு நல்ல உதாரணம்.

# சிங்கப்பூரை மிஞ்சியிருக்கவேண்டிய இலங்கை!

-அலசுவது இராஜதந்திரி-

இலங்கையின் வடக்கு - கிழக்கின் வளங்கள் எப்போது புறக்கணிக்கப்பட்டனவோ அன்றிலிருந்து இலங்கைப் பொருளாதாரத்துக்கு அடி மேல் அடி விழ ஆரம்பித்ததையே அவதானிக்க முடிந்தது.

வடக்கு - கிழக்கின் வளங்களில் இயற்கை வளம் ஒருபுறமிருக்க மனித வளமே பிரமிக்கத்தக்க விதத்தில் விளங்கியிருந்தது. ஆங்கிலேயர்களே இந்த மனித வளத்தை உரிய முறையில் கண்டறிந்திருந்திருந்தனர்.

வடக்கில் வாழ்ந்தோரின் கல்வியறிவு ஒரு பெரும் செல்வமாக ஆங்கிலேய ஆட்சியாளர்களால் நோக்கப்பட்ட அதேசமயம், இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் எழுபதுகளின் ஆரம்பம் வரை கல்வித்துறையில் வடக்கு - கிழக்கு மக்கள் குறிப்பாக, வடபகுதி மக்கள் கொண்டிருந்த ஆளுமைக்கு ஆப்பு வைப்பதுபோல கல்வியில் தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

இதன்காரணமாக, வட பகுதி மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்பை பெரிதும் இழந்தமை கூட பின்னாளில் அவர்களின் கவனம் தீவிரவாத அரசியல் பக்கம் திரும்பியிருந்தமைக்கு பிரதான காரணமாகவும் அமைந்திருந்தது. வட பகுதி மக்கள் சார்ந்த மனித வளம் எவ்வளவு தூரம் சிறப்புற்றுள்ளது என்பதற்கு இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் அவர்கள் வாழ்கின்ற நாடுகளில் கல்வி மற்றும் பொருளாதார ரீதியாக கொண்டுள்ள சிறப்புக்களே சிறந்த உதாரணங்களாக இருக்கின்றன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் பாராளுமன்றில் உரையாற்றியபோது மன்னாரில் எரிவாயு படிவங்கள் காணப்படுகின்றன எனவும், எனவே அந்த எரிவாயு வளத்தை பயன்படுத்தி தேசத்தை முன்னேற்றுங்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு - கிழக்கில் மனித வளத்துக்கும், இயற்கை வளத்துக்குமிடையே பாலமிட்டு அவற்றை வளப்படுத்துவதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பேரனாரும் பிரபல சட்ட அறிஞரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் கைத்தொழில் துறை அமைச்சராக இருந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம், வடக்கே காங்கேசன்துறை சிமெந்து தொழில்சாலை, பரந்தன் இரசாயனத் தொழில்சாலை என்பவற்றோடு கிழக்கே காகிதத் தொழில்சாலையையும் நிர்மாணித்திருந்தார். இதன்மூலம், ஆயிரக்கணக்கான வடக்கு - கிழக்கு மக்களுக்கு வேலை வாய்ப்புக்கள் மட்டும் கிடைக்கவில்லை. வடக்கு - கிழக்கில் காணப்பட்ட இயற்கை வளமும் உரிய வகையில் பயன்படுத்தப்பட்டு இலங்கையில் தேசிய அளவில் அதிகளவு வருவாயைத் தரக்கூடிய தொழில்சாலைகளாக காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழில்சாலை, வாழைச்சேனை காகிதத்தொழில்சாலை என்பவை விளங்கியிருந்தன.

ஆனால், வடக்கு - கிழக்கின் மனித வளத்தை புறக்கணித்த இலங்கையில் மாறி மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள், சிறப்பாக நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிப்பை வழங்கிய வடக்கு - கிழக்கின் பிரதான தொழில்சாலைகளையும் புறக்கணித்திருந்தன. இதன்மூலம், நாட்டின் வடக்கு - கிழக்கில் நல்ல வருவாயை ஈட்டித்தரக்கூடிய தேசிய வளங்கள்கூட பேரினவாத அரசாங்கங்களால் இனவாத அடிப்படையில் பாரபட்சமாக நோக்கப்பட்டிருந்தன.

இலங்கை சுதந்திமடைந்து எழுபது ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டது. இந்த ஏழு தசாப்த காலத்தில் நாட்டின் மனித வளங்களோடு இயற்கை வளமும் ஒன்றிணைந்த முறையில் பொருளாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்குமேயானால், இலங்கை தெற்காசியாவில் - ஒரு சின்னஞ்சிறு நாடாக இருக்கும் சிங்கப்பூரைக்கூட மிஞ்சி விடுமளவுக்கு பொருளாதார ரீதியாக முன்னேற்றம் கண்டிருக்கும்.

1978ஆம் ஆண்டு இலங்கையில் நிறைவேற்று அதிகார ஆட்சி முறையை அறிமுகப்படுத்திய அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, இலங்கையை சிங்கப்பூரைப்போல முன்னேற்றப்போவதாக கூறியிருந்தார். ஆனால், சிங்கப்பூரின் ஸ்தாபகர் லீ குவான் யுவிடம் இருந்த தூரநோக்கு பரந்த இனவாதங்களுக்கு அப்பால்பட்ட பார்வை என்பவை சிங்கப்பூரை முழு உலகுமே வியக்க வைக்குமளவில் வியத்தகு நாடாக மாற்றியமைத்திருந்தது.

சிங்கப்பூரின் கீர்த்திமிக்க பிரதமராக விளங்கிய லீ குவான் யுவுக்கு தோளோடு தோள் நின்று நவீன சிங்கப்பூரை உருவாக்க முன்னின்றவர் யாழ்ப்பாணத்தின் வட்டுக்கோட்டையை பூர்வீகமாகக் கொண்ட சிங்கப்பூர் குடும்பத்தைச் சேர்ந்தவரான ஆர். இராஜரத்தினம் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, சிங்கப்பூரில் சீனர்களே பெரும்பாலானவர்களாக இருந்ததோடு சிங்கப்பூரின் பிரதமர் லீ குவான் யு சீனாவில் வாழ்ந்து வரும் ஏனைய இனங்களையும் மதித்து திறமையானவர்கள் எந்த இனத்தவர்களாக இருந்த போதிலும் அவர்களுக்கு முன்னுரிமை அளித்தமையாலேயே இன்று சிங்கப்பூர் பிரமிக்கத்தக்க வகையில் முன்னேற்றம் கண்டது.

ஆனால், அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சிங்கப்பூர் கனவு எவ்வகையிலும் நிறைவேறாது. அவருக்குப் பின்னரான அரசாங்கங்களிலும் பேரினவாதம் முறுக்கேறியுள்ள நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் வடக்கு-கிழக்கின் வளங்களை பயன்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையும் ஒரு நப்பாசையாக இருக்கும் என்றே கருதலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
சந்தோஷமான நாள். உயர்ந்த மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.தேவையான பொருள் ஒன்றை வாங்குவீர்கள். தன்னம்பிக்கை கூடும். தவறான நபர்களிடம் எச்சரிக்கையாக இருப்பீர்கள்.

**இடபம்**
உறவினர்களின் செயல்பாடுகளால் சந்தோஷம் அதிகமாகும். உங்களது முயற்சி ஒன்றில் ஏற்பட்டி ருந்த தடைகள் தீரும். நீங்கள் எடுத்துக் கொண்ட பொறுப்பை எளிதாக செய்து முடிப்பீர்கள்.

**மிதுனம்**
இடமாற்றம் செய்யும் எண்ணத்தை கைவிடுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை நிலவும். பணிச்சுமை கூடும். உறவினர்களுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

**கடகம்**
தொல்லை கொடுத்தவர் விலகுவார். வெளிநாட்டில் வசிக்கும் உறவினர்கள் நல்ல செய்தியை தருவர். பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உடன்பிறந் தோரின் அன்பு கிடைக்கும்.

**சிம்மம்**
முயற்சியில் ஏற்பட்ட தடை மெல்லத் தீர்ந்து நம் பிக்கை வரும். விலகிய உறவினர்கள் உங்களின் முயற்சி காரணமாக இணைவர். பணியிடத்தில் உள்ள சூழ்நிலை மாறி மனத்திருப்தி தரும்.

**கன்னி**
நிதானத்துடன் செயல்பட்டு பிரச்னையில் இருந்து விலகுவீர்கள். கடன் பிரச்னையை குறைப்பதற்கு புதிய வழியை கண்டறிந்து மகிழ்வீர்கள். முயற்சி களை தள்ளிப்போட வேண்டாம். நட்பு விரியும்.

**துலாம்**
குடும்பத்தில் ஒருவர் வெளிநாடு செல்லும் வாய்ப்பை பெறுவார். பயம் தீரும். செலவுகள் குறையும். நண் பருக்கு உதவி செய்வீர்கள். பெற்றோரை அனு சரித்து சென்று அவர்களை சந்தோஷப்படுத்துவீர்கள்.

**விருட்சிகம்**
சமூக அக்கறையுடன் செய்யும் செயலால் மனம் நிறையும். சிறிய விஷயத்துக்கு அதிக முக்கி யத்துவம் தர வேண்டாம். சமூகத்தில் உயர் நிலையில் இருப்போருடன் புதிய நட்பு உரு வாகும்.

**தனுசு**
பணியாளர்களுக்கு வருமானம் கிடைப்பதால் மகிழ்ச்சி. சகஊழியர்கள் இடையே இருந்த பிரச் னைகள் அனைத்தும் தீரும். உங்களின் தேவை களில் ஒன்று நிறைவடையும். சேமிப்பு அதிகரிக்கும்.

**மகரம்**
செலவு ஒன்று உங்களுக்கு சந்தோஷத்தை தரும். பயம் நீங்கும். சுபச்செய்தி ஒன்று வரும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். நல்லவர்களின் ஆத ரவையும், ஆசியையும் பெற்று மகிழ்வீர்கள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் இருந்து வந்த கருத்து வேறு பாடுகள் நீங்கும். வருமானம் உயர்வது பற்றிய செய்தி வந்து மகிழ்விக்கும். பெற்றோ ரின் பிரச்னை ஒன்று தீர்வதால் மனதில் நிம்மதி ஏற்படும்.

**மீனம்**
செலவுகளையும் பேச்சையும் குறைத்துக் கொள் வது நல்லது. நண்பராக நடிப்பவரிடம் எச்சரிக் கையாக இருக்க வேண்டும். பணியிடத்தில் இருந்த கருத்துவேறுபாடு தீர்ந்து நிம்மதி தரும்.

# ஏழு பேரின் விடுதலை தொடர்பில் பேச தி.மு.கவுக்கு எந்தத் தகுதியும் இல்லை

## எடப்பாடி பழனிசாமி தெரிவிப்பு

சென்னை, டிசெ.01

“ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிக்கி சிறைவாச மிருக்கும் 7 பேரை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்பதற்கு தி.மு.கவுக்கு தகுதி இல்லை” என்று முன்னாள் முதலமைச்சரும், அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாள ருமான எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார். சேலத்தில் எடப்பாடி பழனிசாமி நேற்று அளித்த பேட்டியில் மேலும் கூறியதா வது:-

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 7 பேரை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட் பதற்கு தி.மு.கவுக்கு தகுதி இல்லை. இதுதொடர்பாக கருணாநிதி முதலமைச்சராக இருந்த காலத்தில் அமைச்ச ரவை கூட்டப்பட்டது. அதில், நளினிக்கு குழந்தை உள்ளதால் அவரது தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்கலாம்.



மற்றவர்களுக்கு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை நிறைவேற்ற லாம் என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

நான் (எடப்பாடி பழனி சாமி) முதலமைச்சராக இருந்த போது, அமைச்சரவை கூட்டப் பட்டு 7 பேரை விடுதலை செய்ய வேண்டும் என்று ஆளுநருக்கு கடிதம் அனுப்பி வைத்தோம். அந்த கோப்பு நிலுவையில் உள்ளது. எனவே, இந்த பிரச்னையில் இப்போது தி.மு.க. அரசு இரட்டை வேடம் போடுகிறது. இப் போது அரசியல் ஆதாயம் தேட மு. க. ஸ்டாலின் நாடகமாடி கொண்டிருக்கிறார்.

கரூரில் அ.தி.மு.க. மாவட்ட கவுன்சிலர்கள் மீது வழக்கு தொடர்ந்து, அச்சுறுத்தி தி.மு.கவில் சேர்க்கப்படு கிறார்கள். இதுபோன்று ஆள் சேர்க்கும் நிலையில் அமைச்சர் செந்தில் பாலாஜி உள்ளார். நேரடியாக அரசியல் களத்தில் சந்திக்க முடியாத, திராணியற்ற கட்சி தி.மு.க. பொதுமக் கள் பார்வையிடுவதற்காக ஜெய லலிதா வாழ்ந்த வேதா இல்லம் அரசுடைமையாக்கப்பட்டது. தற்போது நீதிமன்றம் அளித் துள்ள தீர்ப்பு தொண்டர்க ளுக்கு வேதனையை அளித் துள்ளது. இன்று அ.தி.மு.க. செயல்குழு கூட்டம் நடக் கிறது. அதில் வேதா இல்லத்தை மீட்க மேல்முறையீடு செய்ய முடிவு எடுப்போம். எனவே நிச்சயமாக ஜெயலலிதா வாழ்ந்த கோவிலை மீட்டெடுப் போம்.” - இவ்வாறு கூறினார்.

# முதலமைச்சர் ஸ்டாலினை விமர்சிப்பதற்கு அ.தி.மு.கவுக்கு எந்த உரிமையும் கிடையாது

## தமிழக காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி அறிக்கை

சென்னை, டிசெ. 01

தங்களது ஆட்சிக் காலத்தில் பொறுப்பற்ற முறையில் செயல் பட்டுவிட்டு தற்போது தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினை விமர்சிக்க அதிமுகவுக்கு எந்த அடிப்படை உரிமையும் கிடை யாது என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கே. எஸ். அழ கிரி நேற்று வெளியிட்ட அறிக் கையில் தெரிவிக்கப்பட்டிருப்ப தாவது:

“மத்திய காங்கிரஸ் கூட் டணி அரசு நிறைவேற்றிய தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் அடிப்படையில் தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட் சியில் பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டி ருக்க வேண்டும். ஆனால், சில ஆண்டுகள் கழித்து அன்றைய முதல்வர் ஜெயலலிதா தலை



மையில் அமைக்கப்பட்ட மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் 2015 டிசெம்பர் 2ஆம் தேதிக்கு முன்பு ஒருமுறை கூட கூடி விவாதிக்கவில்லை. பேரிடர் ஏற்படுவதற்கு முன்பு அதைத் தடுக்கிற வகையில்தான் ஒரு அரசு செயல்பட வேண் டுமே தவிர, பேரிடர் நிகழ்ந்த பிறகு நிவாரண உதவி செய்வது என்பது உண்மையான பேரிடர் மேலாண்மையாக இருக்க முடி யாது.

கடந்த காலத்தில் 2004இல் சுனாமி, 2011இல் தானே புயல் போன்ற படிப்பினைகளின் அடிப்படையில் அன்றைய ஜெயலலிதா அரசு செயல் படாத காரணத்தால் 600க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழப்பு ஏற்பட்டு கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்து களை மக்கள் இழந்துள்ளனர். அரசுக்கு இழப்பு என்பதை விட, இந்த வெள்ளப் பெருக்கால் மக்கள் தங்கள் வாழ்வாதாரங் களை இழந்திருக்கிறார்கள். இது மக்களுக்கு எதிராக அன் றைய ஜெயலலிதா அரசு இழைத்த மிகப்பெரிய குற்றமாகும்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத் தில் பொறுப்பற்ற முறையில் செயல்பட்டு மக்கள் பாதிப் பிற்குக் காரணமான அ.தி.மு. கவினர் இன்றைய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலி னையோ, தமிழக அரசையோ விமர்சனம் செய்வதற்கு எந்த அடிப்படை உரிமையும் கிடையாது.”

# கமல்ஹாசனுக்கு தொடர்ந்தும் சிகிச்சை!

## மக்கள் நீதி மய்யம் கட்சி அறிவிப்பு

சென்னை, டிசெ.01

கமல்ஹாசன் மருத்துவ மனையில் இருந்து வீடுதிரும்பி விட்டதாகப் பரவும் தகவலில் உண்மையில்லை என்று மக்கள் நீதி மய்யம் சார்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது. அவர் மருத் துவமனையில் தொடர்ந்தம் சிகிச்சை பெற்றுவருவதாகவும் நேற்று தெரிவிக்கப்பட்டது.

நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரு மான கமல்ஹாசனுக்கு சமீ பத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. அமெரிக்கா சென்று திரும்பிய பின்னர் தனக்குத் தொற்று ஏற்பட்டுள்ளதாக அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவித் திருந்தார். இதனைத் தொடர்ந்து அவர் சென்னையில் உள்ள ராமச்சந்திரா மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

தமிழக முதல்வர் ஸ்டாலின், சீமான் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும், திரையுலக பிரபலங்கள் பலரும் கமல்ஹா சன் விரைந்து குணமடைய வேண்டி வாழ்த்து தெரிவித்த னர். நடிகர் ரஜினிகாந்த், கமலிடம் தொலைபேசியில் பேசி, அவரது உடல்நிலை குறித்துக் கேட்டறிந்தார்.

கமலின் உடல்நிலை குறித்து மருத்துவமனை நிர்வாகம் அவ் வப்போது அறிக்கை வெளி யிட்டு வருகிறது.

இந்நிலையில் கமல்ஹாசன் மருத்துவமனையில் இருந்து வெளியேறிவிட்டதாக ஒரு தகவல் நேற்று காலை முதல் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. அத்துடன் ஒரு புகைப்படம் பகிரப்பட்டு வரு கிறது.

இதனைத் தொடர்ந்து சமூக வலைதளங்களில் பரவும் அந்தத் தகவலில் உண்மையில்லை என்று மக்கள் நீதி மய்யம் செய் தித் தொடர்பாளர் முரளி அப் பாஸ் தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பு மக்கள் நீதி மய்யம் கட்சியின் அதிகாரபூர்வ ருவிற் றர் பக்கத்தில் வெளியாகியுள் ளது.

அதில், “தலைவர் மருத்துவ மனையிலிருந்து இன்னும் வீடு திரும்பவில்லை. ஆனால், நல முடன் இருக்கிறார். விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்புவார். வெளியில் உலவும் நிழற்படம் இரண்டு ஆண்டு களுக்கு முன் அப்போலோ மருத்துவமனையில் கால் அறுவை சிகிச்சை முடிந்து தலைவர் வீடு திரும்பியபோது வெளியான புகைப்படம்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் நாளை திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 01

யாழ்ப்பாணம் ஆரியகுளம மகிழ்வூட்டும் திடல் நாளை வியாழக்கிழமை வடக்கு மாகாண ஆளுநரால் திறந்து திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் நாகவிகாரையின் முன்னால் உள்ள ஆரிய குளம் பகுதி தியாகி அறக் கொடை இயக்குநர் வாமதேவாவின் ஒரு கோடி ரூபாய் நிதிப் பங்களிப்பில் புனரமைப்புச் செய்யப்பட்டது. இவ்வாறு புனரமைக்கப்பட்ட குளமே நாளை திறந்து வைக்கப்படவுள்ளது.

மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் இடம் பெறும் இந்த திறப்பு விழாவில் இதற்கான நிதி வழங்குநர் கௌரவிக்கப்படவுள்ளார். (அ)

# நத்தார் பண்டிகைக் காலத்தில் நாட்டை முடக்கும் முடிவில்லை

## அமைச்சரவை பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 01



**“நத்தார் பண்டிகை காலத்தில் நாட்டை முடக்குவது தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. எனினும், அபாயத்திலிருந்து நாம் இன்னும் முழுமையாக மீளவும் இல்லை. எனவே, அனைவரும் பொறுப்புடன் செயல்படவேண்டும்.” _ என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இதில் கருத்து வெளியிடும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

“பண்டிகை காலத்தில் கொரோனா கொத்தணி உருவாகும் அபாயம் உள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே, நாட்டை முடக்கும் திட்டம் உள்ளதா” என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். (அ)

## வீடுகளில் சிகிச்சை பெற்றுவரும் தொற்றாளர் எண்ணிக்கை உயர்வு


கொழும்பு, டிசெ. 01

வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வரும் கோவிட்-19 நோயாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்-

சுகாதார ஆலோசனைக்கு அமைவாக வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிப்படும் கோவிட் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக சுகாதார பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வாரத்திலும் பார்க்க இந்த வாரத்தில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக விசேட வைத்தியர் திருமதி மல்காந்தி கல்ஹென தெரிவித்துள்ளார்-என்றுள்ளது. (அ)



## மியன்மாரிலிருந்து அரிசி

கொழும்பு, டிசெ. 01

மியன்மாரிலிருந்து 20 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட விலையின் கீழ் இந்தக் கொள்வனவை மேற்கொள்வதற்காக வர்த்தக அமைச்சராலேயே குறித்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

## மதுபானசாலை அமைப்பதற்கு பெரியபரந்தனில் மக்கள் எதிர்ப்பு

கிளிநொச்சி, டிசெ.01

கிளிநொச்சி - பெரிய பரந்தனில் புதிய மதுபானசாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று நடத்தினர்.

அங்கு மதுபானசாலை அமைப்பதற்கு அதிகாரிகளுக்கு அவர்கள் எழுத்துமூலம் ஆட்சேபனைகளை நடத்தியதுடன், பல தடவைகள் போரட்டங்களையும் நடத்தினர்.

இந்த நிலையில், மீண்டும் நேற்று செவ்வாய்க்கிழமை கரைச்சி பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புதிதாக அமையும் மதுபானசாலைக்கு அண்மையாக கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளி. புனித திரேசா பெண்கள் கல்லூரி, மற்றும் விஞ்ஞானக் கல்வி நிலையம் உள்ளிட்ட கல்வி நிலையங்கள் காணப்படுவதாக பலமுறை மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்து பல பல நூறு பொதுமக்கள் திரண்டு இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (ஐ)

## அரசியலிலிருந்து முற்றாக ஒதுங்குகின்றார் ரணதுங்க



கொழும்பு, டிசெ. 01

ஐக்கிய தேசியக்கட்சியின் அனைத்துவிதமான அரசியல் செயற்பாடுகளில் இருந்தும் தான் ஒதுங்குவதாக முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அறிவித்தார்.

ஐ.தே.கவின் அடிப்படை அங்கத்துவத்திலிருந்தும் விலகியுள்ள அவர், இந்த முடிவுக்கான காரணங்களை பட்டியலிட்டு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலில் அர்ஜுன ரணதுங்க ஐக்கிய தேசியக்கட்சியின்கீழ் போட்டியிட்டார். எனினும், வெற்றி கிடைக்கவில்லை.

தேர்தலின் பின்னர் கட்சியில் மறுசீரமைப்பு வேண்டும் என வலியுறுத்தினார். அதற்கான சாதகமான பணிகள் இடம்பெறாத நிலையிலேயே ரணதுங்க் ஐ.தே.கவில் இருந்து வெளியேறியுள்ளார்.

சம்பிக்க ரணவக்கவின் 43 என்ற அரசியல் இயக்கம் அல்லது ஐக்கிய மக்கள் சக்தியில் எதிர்காலத்தில் இணைந்து பயணிக்கக்கூடும் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (அ)

## காரைநகர்-ஊர்காவற்துறை படகுப்பாதையில் பயணிக்கும் மக்களுக்கு பாதுகாப்பு அங்கிகள்





யாழ்ப்பாணம், டிசெ. 01

காரைநகர்-ஊர்காவற்துறைக்கு இடையில் நடைபெறும் படகுப்பாதை சேவையில் பயணிப்போருக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் பாதுகாப்பு அங்கிகளை வழங்கியுள்ளனர்.

காரைநகர் - ஊர்காவற்துறைக்கு இடையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இலவசமாக படகுப்பாதை சேவையை நீண்ட காலமாக நடத்தி வருகின்றனர்.

குறித்த படகுப் பாதை சேவை ஊடாக உத்தியோகத்தர்கள் , ஊர்காவற்துறை நீதிமன்றம் செல்வோர், மாணவர்கள் என பல தரப்பினரும் சென்று வருகின்றனர்.

சுமார் 500 மீற்றர் தூரமான இந்த படகுப்பாதை சேவை நடைபெறாவிடின் , இரண்டு ஊர்களுக்கு இடையில் பயணிப்போர் யாழ்ப்பாணம் சென்றே பயணிக்கவேண்டும். அதற்காக அவர்கள் சுமார் 40 கிலோ மீற்றர் தூரம் சுற்ற வேண்டிய நிலை ஏற்படும்.

இரண்டு ஊர்களுக்கு இடையிலும் நிரந்தர பாலம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப் பதற்கு சுமார் 170 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி இருந்த போதிலும் பாலம் அமைப்பதற்கான பணிகள் எவையும் ஆரம்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, திருகோணமலை கிண்ணியா குறிஞ்சாக்கேணி களப்பில் சேவையில் ஈடுபட்டு வந்த படகுப்பாதை கடந்த 23ஆம் திகதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்தவர்களில் பாடசாலை மாணவர்கள் ஐந்து பேர் உள்ளிட்ட ஏழு பேர் உயிரிழந்தனர்.

பாதையில் பயணித்தவர்களுக்கு பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்படாது , பாதுகாப்பு இன்றியே அவர்கள் பயணித்த தாலயே விபத்தில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 2 கிலோ கிராம் கஞ்சாவுடன் ஓட்டமாவடியில் ஒருவர் கைது!

மட்டக்களப்பு, டிசெ. 01

2 கிலோ கேரள கஞ்சாவுடன் காத்தான்குடியைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவர் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி பசாரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் யாழ்ப்பாணத்திலிருந்து பிறைந்துரைச்சேனைக்கு வியாபார நோக்கில் கேரளக் கஞ்சாவை கடத்தி வந்த நிலையில் வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைவாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய போதையொழிப்புப் பிரிவின ரால் கைது செய்யப்பட்டமை குறிப் பிடத்தக்கது. இவருடமிருந்து 2 கிலோ அளவிலான கேரளக் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், நீதிமன்ற உத்தரவின் பேரில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (அ)



# எரிவாயு சிலிண்டர் வெடிப்பு; சி.ஐ.டி விசாரணை அவசியம்

## சபையில் எதிர்க்கட்சி கோரிக்கை

**கொழும்பு, டிசெ. 01**

**நாடளாவிய ரீதியில் பதிவாகும் எரிவாயு சிலிண்டர்கள் வெடித்து சிதறிய சம்பவங்கள் தொடர்பாக ஆராய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைக்கு அழைப்பு விடுக்குமாறு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.**

இந்த விடயம் குறித்து நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் புலனாய்வொன்றை நடத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என அவர் கோரினார்.

நாட்டின் பல பாகங்களில் இருந்து எரிவாயு சிலிண்டர்கள் வெடித்துச் சிதறும் சம்பவங்களைத் தொடர்ந்து உள்நாட்டில் தினசரி எரிவாயுவைப் பயன்படுத்தும் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்ற பல இடங்களை பட்டியலிட்ட பிரேமதாஸ, கடந்த 48 நாட்களில் 11 சம்பவங்கள் பதிவாகியுள்ள அதே வேளை, இந்த சம்பவங்கள் அசாதாரணமானவை எனவும் கூறினார்.

அரசாங்கம் வீட்டு உபயோகத்திற்காக 18 லீற்றர் கலப்பின எரிவாயு உருளையை அறிமுகப்படுத்திய பின்னர் இந்த நிகழ்வுகள் தொடங்கின என்றும் இது மக்களை ஏமாற்றி பாரிய இலாபத்தை ஈட்டும் அரசின் தந்திரம் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்கூறிய விடயத்தில் முக்கிய விடயங்களில் ஒன்று வாயு கலவை மாற்றப்பட்டு எடை குறைக்கப்பட்டது எனவும் ஏனைய முக்கிய விடயம் எரிவாயு சிலிண்டர்களில் புரொப்பேன் மற்றும் பியூட்டேன் வீதங்கள் பூர்த்தி செய்யப்படாத நிலைக்கு மாற்றப்பட்டமை எனவும் சஜித் பிரேம தாஸ குறிப்பிட்டார். (அ)

# மன்னாரில் 17,167 ஏக்கர் வயல்கள் நீரில் மூழ்கின



மன்னார், டிசெ. 01

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்த கடும் மழையால் 17ஆயிரத்து 167 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கின என்று மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ. மரின்குமார் தெரிவித்துள்ளார்.

பலத்த மழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பயிர் அழிவு தொடர்பில் உதவி ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்டத்தில் 2021-22 காலபோக நெற்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட 13 கமநல சேவைகள் நிலையங்களின் கீழும் இது வரை சுமார் 33 ஆயிரத்து 994 ஏக்கர் வயல் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் விதைப்புக்காக தயார்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்த அடை மழை மற்றும் வெள்ளம் காரணமாக சுமார் 17ஆயிரத்து 167 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 5 ஆயிரத்து 555 ஏக்கர், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 400 ஏக்கர், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 345 ஏக்கர், மடு பிரதேச செயலாளர் பிரிவில் 825 ஏக்கர், மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 42 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

தவிர, செய்கை பண்ணப்பட்டுள்ள மரக்கறிகள் மற்றும் ஏனைய உணவுப் பயிர்களுக்கும் மழை மற்றும் வெள்ளத்தினால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் எமது கமக்காரர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வெள்ள நீர் தற்போது வடிந்து வருகின்றது. எனினும், பயிர் அழிவு தொடர்பில் எமது உத்தியோகத்தர்களால் தகவல் திரட்டப்படுவதுடன் பயிர் சேத மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பில்மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். - என்றார். (ஐ)

# தவறிழைத்த அரசாங்க அதிகாரிகள் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்

மானிப்பாய், டிசெ. 01

“வடக்கு மாகாணத்தில் அரச நிறுவனங்களில் பணியாற்றும் அதிகாரிகள், காலங்களில் தவறு செய்திருந்தால் அந்த விடயங்களை எனக்கு எழுத்து மூலம் சமர்ப்பணம் செய்யுங்கள். இது விடயங்கள் மனிதாபிமானத்துடன் அதற்கான விடயங்களை விரைந்து முன்னிறுத்துவேன்” - இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்க நிறுவனங்களில் தினமும் 8 மணிநேரம் கடமையாற்றும் அரச அலுவலர்கள், பொது மக்கள் மற்றும் அரச அலுவலர்களால் முன்னிலைப்படுத்தும் அனைத்து விடயங்களையும் மூன்று நாள்களுக்குள் பதில் அளிக்கவேண்டும்.

கடந்தகால கணக்காய்வு விடயங்கள் எதுவும் நிலுவையில் இல்லை. எனினும், ஆவணங்களை - பதிவுகளை அழிக்கும் முயற்சிகளை செய்யாமல் இருப்பது நல்லது.

2021இல் மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ள நிதியை நாங்கள் குறைவாகப் பயன்படுத்தியுள்ளோம். இது மக்கள் பார்வையில் துரோகச் செயல் - என்றார். (ஐ-5)

# வெளிநாட்டவரிடமிருந்து மலேரியா பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகம்

கொழும்பு, டிசெ. 01

இலங்கையில் உள்ளவர்கள் வெளிநாட்டவர்களிடமிருந்து மலேரியா நோயால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என சுகாதார அமைச்சின் மலேரியா எதிர்ப்பு பிரசார அமைப்பு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வருபவர்கள் காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மலேரியா பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும் என மலேரியா எதிர்ப்பு பிரசார அமைப்பின் பணிப்பாளரின் ஆலோசகர் சமூக மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

இந்த வருடத்தில் இது வரையில், நாட்டுக்கு வந்த வெளிநாட்டவர்களில் 21 மலேரியா நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ள அதே வேளை, கடந்த வருடம் 30 மலேரியா நோயாளிகள் பதிவாகியிருந்தனர் என அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டிலிருந்து வருகை தரும் மக்கள், கொரோனா தொற்றுநோய் காரணமாக 14 நாட்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், 10ஆவது நாளில் மலேரியா பரிசோதனை செய்யப்பட்டனர் என்றும் அங்கு 10 மலேரியா வழக்குகள் பதிவாகியிருந்தன என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# விபத்தில் குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 01

கொழும்பு - குருநாகல் வீதி, பொத்துஹெர பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில், மூன்று வயது குழந்தை உயிரிழந்தார்.

லொறியொன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து சம்பவம் ஏற்பட்டுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த வயோதிபப் பெண் ஒருவரின் கைகளில் இருந்த குழந்தையே படுகாயமடைந்த நிலையில் உயிரிழந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதியை கைது செய்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பெற்றோலிய கூட்டுத்தாபனம்தான் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம்!

## அனுர பிரியதர்ஷன யாப்பா குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 01

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் மின்சார சபையுமே முக்கிய காரணமென பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபை ஆகியன எதிர்கொள்ள நேர்ந்துள்ள பாரிய நட்டத்திலிருந்து மீள்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களே தேவையென அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அனுர பிரியதர்ஷன யாப்பா இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் இந்த இரு துறைகளிலும் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு உரிய தீர்வை பெற்றுக் கொள்வதற்கு விரிவான பேச்சுவார்த்தை ஒன்றையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் எனவும் அனுர பிரியதர்ஷன யாப்பா வலியுறுத்தினார்.

இதேவேளை, இந்த துறைகளுக்கு வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்ளாதபட்சத்தில் மேலும் பல பாதிப்புக்களை எதிர்காலத்தில் எதிர்நோக்கவேண்டிவரும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் யாழில் போராட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 01

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.



யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அலுவலகத்துக்கு முன்னால் நேற்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

வலிந்து காணாமல் போனோருக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வதேசமே நீதியைத் தா போன்ற பல்வேறு கோஷங்கள் இதன்போது எழுப்பப்பட்டன. ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதி வலிந்து காணாமல் போனோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# எரிவாயு சிலிண்டர் வெடிப்பு விவகாரம் தீர்வுக்கு ஜனாதிபதி தலைமையில் குழு

கொழும்பு, டிசெ. 01

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வுகாண குழு வொன்று நியமிக்கப்படவுள் ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரி வித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதற்கமைய, ஜனாதிபதி தலைமையில் இந்தக் குழு எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் நியமிக்கப்படும் என அவர் மேலும் கூறினார். (அ)

# ஜனாதிபதியை தினமும் சபைக்கு அழைக்கவேண்டிய நிலை ஏற்படும்

## அமைச்சர்களுக்கு சபாநாயகர் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 01

**பாராளுமன்றத்துக்கு ஜனாதிபதி வருகை தரும் நாட்களில் மாத்திரம் அனைத்து அமைச்சர்களும் சபைக்கு வருகை தருகின்றனர் என சுட்டிக்காட்டிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, எனவே எதிர்காலத்தில் ஜனாதிபதியை ஒவ்வொரு நாளும் பாராளுமன்றத்துக்கு அழைக்கவேண்டிய நிலை உருவாகுமெனவும் குறிப்பிட்டார்.**

நேற்று பாராளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிப்பதற்காக எந்தவோர் அமைச்சரும் சபையில் இல்லையென சபாநாயகர் தெரிவித்தார்.

மேலும், பாராளுமன்றில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பொறுப்புடன் பதிலளிக்க வேண்டியது அவசியமெனவும் சபாநாயகர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

எனவே, எதிர்வரும் நாட்களில் அனைத்து அமைச்சர்களும் பாராளுமன்றுக்கு அழைக்கவேண்டியதன் அவசியத்தை ஆளுங்கட்சியின் பிரதான அமைப்பாளருக்கு சபாநாயகர் இதன்போது வலியுறுத்தியுள்ளார். (அ)



# கட்டுநாயக்கவில் பலத்த பாதுகாப்பு

கொழும்பு, டிசெ. 01

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடுமையான பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

ஒமைக்ரோன் கோவிட் மாறுபாடு நாட்டுக்குள் நுழைவதை தடுப்பதற்காக இந்த பாதுகாப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இதுவரையில் புதிய மாறுபாடான ஒமைக்ரோன் உலகின் பல நாடுகளில் பரவியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதில் இருந்து தப்பிக் கொள்வதற்காக உரிய சுகாதார ஆலோசனைகளை பின்பற்றவேண்டும் என அவர் கோரினார். எனினும் நாட்டை மூடி வைப்பதில் எவ்வித பயனும் இல்லை எனவும் அவர் கூறினார். (அ)

# இந்திய மீனவர்களால் ஏற்பட்ட இழப்புக்கு 40 கோடி ரூபாய் நட்டஈடு வழங்குங்கள்!

## இந்திய துணைத் தூதரிடம் யாழ். மீனவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 01

இந்திய மீனவர்களின் அத்துமீறல் காரணமாக யாழ். மாவட்ட மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கான நட்டஈடாக 40 கோடி ரூபாயை இந்திய அரசு வழங்கவேண்டும் என யாழ். மீனவர்கள் தரப்பில் இந்தியத் துணைத் தூதுவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னராசா, செயலாளர், பொருளாளர், உப தலைவர் ஆகியோர் அடங்கிய குழு நேற்று இந்திய துணைத் தூதுவரை யாழ்.இந்திய துணைத் தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சம்மேளனத் தலைவர் அன்னராசா-

“யாழ்.மாவட்ட மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையால் பாதிக்கப்படுகின்றனர். இந்திய மீனவர்களின் அத்துமீறல் எங்கள் மீனவப் பரம்பலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதோடு மீனவர்கள் கூலி தொழிலுக்குச் செல்லக்கூடிய துர்ப்பாக்கிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

நீண்ட காலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைக்கு எதிராகப் பல போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டும் தற்போதும் இந்திய மீனவர்களின் வருகை பருத்தித்துறை மற்றும் நெடுந்தீவு பிரதேசங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகிறோம். அந்த வகையில் யாழ்.இந்தியத் துணைத் தூதரைச் சந்தித்து பேசி உள்ளோம்.



குறிப்பாக இந்திய மீனவர்களுக்கும் வடக்கு மீனவர்களுக்கும் இடையே உள்ள பிரச்னைக்கு தீர்வு காணுமாறும் இந்தியாவுக்கோ அல்லது தமிழ் நாட்டுக்கோ எதிரான பிரச்னையாக இதனை கருதவேண்டாம் எனவும் கோரியுள்ளோம். பல கோடி ரூபா சொத்துகளை இழந்து இருக்கின்றோம். எங்கள் கடற்தொழில் அமைச்சு 500 கோடி ரூபாய்க்கு மேல் இந்திய அரசாங்கத்திடம் நட்டஈடு கோரியுள்ளது

இருந்தபோதிலும் யாழ். மாவட்ட மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனங்களை பொறுத்தவரை அண்ணளவாக 40 கோடி ரூபாயை எங்கள் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்காக வழங்குமாறும் அதற்குரிய திட்டம் ஒன்றை தயாரித்து கடந்த வாரம் கடற்றொழில் அமைச்சரை சந்தித்து கையளித்திருக்கின்றோம். அதனைத் தொடர்ந்து இந்தியத் துணைத் தூதுவரிடமும் கையளித்துள்ளோம்.

எங்கள் மீனவர்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்க இந்த 40 கோடி ரூபாயை உதவியை தொழிலாளர்களுக்கு மானியமாகவும் சுழற்சி முறையில் வழங்குவதற்கு கோரி நிற்கின் றோம்.

அந்த கோரிக்கையை தாம் பரிசீலிப்பதாக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் தெரிவித்தார் - என்றார். (அ-03)

# வல்வெட்டித்துறை நகர சபை பட்ஜெட் மீண்டும் தோற்கடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 01

வல்வெட்டித்துறை நகர சபையின் பட்ஜெட் நேற்று இரண்டாவது முறையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபை பட்ஜெட் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை தவிசாளர் என். செல்வேந்திரா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கடந்த 17ஆம் திகதி சபையில் முன்வைக்கப்பட்ட பட்ஜெட் தோற்கடிக்கப்பட்ட நிலையில், நேற்று திருத்தங்களுடன் சபையில் முன்வைக்கப்பட்டபோதும் அதுவும் தோற்கடிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் தவிசாளார் கே. கருணாந்தராசா(வயது 76) கொரோணா தொற்றுக்கு உள்ளாகி கடந்த ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி உயிரிழந்தார்.

அதனை அடுத்து புதிய தவிசாளராக என். செல்வேந்திரா கடந்த செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார்.

இந்நிலையில் அவரால் முன்வைக்கப்பட்ட இரு பட்ஜெட்டும் தோல்வியடைந்துள்ளன.(அ-2)

# 6 இலட்சம் பேருக்கு பூஸ்டர்!

கொழும்பு, டிசெ. 01

நாட்டில் மூன்றாம் தடுப்பூசியான பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்தை அண்மித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை மூன்றாம் டோஸாக பைஸர் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் மொத்த எண் ணிக்கை 5 இலட்சத்து 81 ஆயி ரத்து 973 ஆக அதிகரித்துள்ளது.

இதேநேரம், நேற்று முன்தினம் சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 972 பேருக்கும் சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 3,367 பேருக்கும் செலுத்தப்பட்டது.

அதேபோல ஸ்புட்னிக் V தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 05 பேருக்கும் செலுத்தப்பட்டது.

மேலும் பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 1,038 பேருக்கும் பைஸர் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 584 பேருக்கும் பைஸர் தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் 60,490 பேருக்கும் செலுத்தப் பட்டது.

அதேநேரம், மொடர்னா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 11 பேருக்கும் செலுத்தப்பட்டது.

# கட்டைக்காடு பகுதியில் கரையொதுங்கிய சடலம்

யாழ்ப்பாணம், டிசெ. 01

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்டு கட்டைக்காடு பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியது.

கடந்த 4 நாட்களில் யாழ்ப்பாண கடற்கரைகளில் மீட்கப்பட்ட 4ஆவது சடலம் இதுவாகும்.

உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய சடலத்தை மீனவர்கள் அவதானித்து, கிராம சேவகர் மற்றும் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுகளில் கடந்த 4 நாட்களில் 3 சடலங்கள் மீட்கப்பட்டன. அவை அடையாளம் காணப்படவில்லை. (அ-2)

# பண்டிகைக் காலத்தில் கட்டுப்பாடு வேண்டும்

கொழும்பு, டிசெ. 01

பண்டிகைக் காலத்தில் பயணக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்துமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ள அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, கடந்த சில வாரங்களாக பொது மக்களின் நடத்தை காரணமாக பயணக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவது தவிர்க்க முடியாததாக உள்ளது. பண்டிகைக் காலங்களில் பயணக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்தத் தவறினால், ஜனவரியில் கடுமையான நிலைமை ஏற்படும்-என்றார்.

நாட்டில் மீண்டும் முடக்கம் அமுல்படுத்தப்படுவதைத் தடுக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**" பெரும் மருத்துவ அனர்த்தம் மற்றும் பொருளாதார வீழ்ச்சியின் மத்தியில் பெண்களின் பங்களிப்பு குடும்ப பொருளாதாரத்திற்கு மிகவும் அவசியமானதாக உள்ள நிலையில் அவர்கள் தாங்களாக கூட்டாக இணையும்போது கூட்டுறவுத்துறையும் அவர்களின் வளர்ச்சிக்கு கை கொடுக்க முன்வரவேண்டும்.**

# கூட்டுறவில் பெண்கள்: ஓர் அனுபவப்பகிர்வு



நேர்காணலும் கட்டுரையாக்கமும்:
- கா. சுகன்யா

திருமதி. ஜெயமணி ஜோசப் (சமூக அபிவிருத்தி மன்ற உப தலைவி) உடனான நேர்காணலின் கட்டுரையாக்கம். இவர் பண்டத்தரிப்பை சேர்ந்தவர். இளமைக் காலத்திலேயே தனது தந்தையை முன்னுதாரணமாக கொண்டு தன்னையும் சமூக செயல்பாடுகளில் ஈடுபடுத்த விரும்பினார். 1980ஆம் ஆண்டுகளில் கூட்டுறவுக் கருத்துக்களால் கவரப்பட்டு ஐக்கிய நாணய சங்கங்களில் இணைந்து பிற்பட்டகாலங்களில் அச்சங்கங்களின் மாவட்ட மட்ட சமாசத்தின் இயக்குநர் சபையிலும் அங்கம்வகித்தார். தற்போதும் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச்சபை, வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி போன்றவற்றின் நிர்வாகசபையில் இருந்து தனது ஆழமான கூட்டுறவு அனுபவங்களுக்கூடாக கூட்டுறவுத்துறையின் முன்னேற்றத்திற்காக பணியாற்றிவருகிறார். இரண்டு பிள்ளைகளின் தாயாக தனது குடும்ப பொறுப்புக்களுடன் சமூக சேவையையும் சரிவரச் செய்து வருகிறார். இதற்கு அவரது கணவரும் பக்கபலமாக இருந்துள்ளார் என்பதை தெரிவித்துள்ளார்.

1980களில் வங்கிகளால் வழங்கப்படும் கடன்கள் மிகவும் குறைந்தளவில் கிராமப்புற மக்களை வந்தடைந்ததால் சிக்கனம் மற்றும் சேமிப்பு என்பவற்றுக்கூடாக நிதித்தேவையை பூர்த்தி செய்யும் கட்டமைப்பு பரவலாக யாழ்ப்பாணம் முழுவதும் உருவாக்கும் போக்கு காணப்பட்டது. இது மகளிர் சங்கங்கள், சமூக அபிவிருத்தி மன்றங்கள் என்று பல பெயர்களில் உருவாக்கப்பட்டது. சமகாலத்தில் மறுபுறம் ஐக்கிய நாணய சங்கங்கள் உருவாகிக் கொண்டிருந்தது. இந்த ஐக்கிய நாணய சங்கங்கள் 1917ஆம் ஆண்டுகளில் இருந்து சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கங்கள் (சி.க.கூ) என்று அழைக்கப்பட்டு வருகின்றன. இவை அடிமட்ட நிலையில் உள்ள மக்களை திரட்டி அவர்களுக்கு நிர்வாகம் நடத்துவதற்கான பயிற்சிகளை கொடுத்து நிதியை கையாழுவதற்கு பழக்குகின்றது. இங்கு 75% பெண்களின் பிரதிநிதித்துவம் இருப்பதால் குடும்ப பொருளாதாரத்திற்கு நிதிசார்ந்த பங்களிப்பை செய்பவர்களாகவும் தனி மனித ஆழுமை அபிவிருத்தி கொண்டவர்களாகவும் பெண்கள் தம்மை வளப்படுத்திக் கொள்ளமுடிகிறது.

### சி.க.கூவும் சமூக அபிவிருத்தி மன்றமும்

திருமதி. ஜெயமணி ஜோசப் இரு வேறுபட்ட நிதி குழுக்களில் தன்னை இணைத்துக்கொண்டார். ஒன்று பண்டத்தரிப்பு மகளிர் சிக்கனக்கடன்வழங்கும் கூட்டுறவுச்சங்கம் (1982). மற்றயது பண்டத்தரிப்பு சமூக அபிவிருத்தி கழகம் (1988). இவ்விரு அமைப்பின் படிப்பினைகள் தற்போதைய கிராமப்புற பொருளாதார நிலமைகளை விளங்குவதற்கும் சமூக அமைப்புகள் தம்மில் மாற்றங்களை கொண்டுவருவதற்கும் உதவலாம். இவர் இணைந்து கொண்ட இரு அமைப்புக்களும் அமரர் சண்முகம். ஞானப்பிரகாசத்தின் (சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்) சிந்தனைகளால் உருவாக்கப்பட்டவை.

சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் என்பது தன்னாட்சி சமூக அடிப்படையிலான ஜனநாயக ரீதியான அமைப்பு. இங்கு யாரும் அங்கத்துவராகலாம். அதன்பின் கடன்களையும் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு சங்கமும் அதன் உறுப்பினர்களினால் தெரிவுசெய்யப்படும் தலைவர்களால் தலைமைதாங்கப்படும். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை தலைமைத்துவம் அங்கத்தவர்களுள் இருந்து மீளத் தெரிவுசெய்யப்படும். இந்த கட்டமைப்பில் ஒரு பொதுவான இலக்கை பல்வேறு மட்ட உறவுகளுக்கூடாக அடைவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகிறது. மாகாண மட்டத்தில் சம்மேளனங்களும் மாவட்ட மட்டத்தில் சமாசங்களும் கிராமமட்டத்தில் சங்கங்களும் என்றவாறாக மூன்று மட்டங்களில் இவை செயற்படுகின்றன. இவற்றை கண்காணிப்பதற்கு மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் கூட்டுறவுத் திணைக்களமும் உள்ளது.

மக்களுக்கு நிதி தேவைப்படும்போது அது உடனடியாகவும் இலகுவாகவும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். கூட்டுறவு அமைப்பிற்குள் காணப்பட்ட இறுக்கமான சட்ட திட்டங்கள் நிதிச்சுழற்சியில் சிறிய காலதாமதத்தை ஏற்படுத்தியது. இந்த சட்டங்களில் மாற்றங்களை செய்வதும் இலகுவானதாக இருக்கவில்லை. அதில் உள்ள குறைபாடுகளை விளங்கி அதை நிவர்த்தி செய்யும் முகமாக சமூக அபிவிருத்தி மன்றம் எனும் அமைப்பை உருவாக்கினர். இது தனி நபரால் நிர்வகிக்கப்படும் ஒரு அமைப்பாகவே இருந்தது.

இரண்டும் ஒரே மாதிரியான சேவைகளை வழங்கியபோதும் கட்டமைப்பு ரீதியாக வேறுபாடுகளை கொண்டிருந்தன. சிறிய அமைப்பாக உருவாகிய சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதி மற்றும் செயற்பாடுகள் காலத்துடன் தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டு சென்றது. ஆனால் அமரர் ஞானப்பிரகாசத்தின் மறைவுக்கு பின்னர் மன்றத்திற்கூடாக திரட்டப்பட்ட நிதியை கையாழுவது மற்றும் பாதுகாப்பது யார் என்ற கேள்விகள் எழுந்தது. ஒரு நபரின் உடனடி தேவையை பூர்த்தி செய்வதற்கு சிறிய காலதாமதம் ஏற்பட்டாலும் பெரியளவிலான நிதி பல பேரால் பாதுகாப்பான முறையில் பயன்பெறக் கூடியதாக இருக்கும் கூட்டுறவு அமைப்பாக தன்னை மாற்றிக்கொள்ள தீர்மானித்து. யாழ்மாவட்ட சமூக அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம் எனும் பெயரில் கூட்டுறவு சங்கமாக பதிவுசெய்து வழமையான செயற்பாடுகளை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

### கிராமப்புற நிதித்தேவைக்கு பொருத்தமான கட்டமைப்பு

சி.க.கூகளின் தனித்துவமே அவை கிராமத்தில் மக்களோடு மக்களாக சேர்ந்து இயங்கும் அமைப்பாக இருப்பதுதான். இதன் நிர்வாகிகளும் அதே கிராமத்தில் உள்ள பெண்களே. இவை அங்கத்தவர்களுக்கு சுழற்சிமுறையில் மிகவும் குறைந்த வட்டி வீதத்தில் கடன்களை வழங்குகிறது. மக்களுடன் நேரடியான தொடர்புகள் இருப்பதால் அங்குள்ள தேவைகள் மற்றும் வழங்கள் பற்றிய தெளிவான புரிந்துகொள்ளலுடன் கடன்கள் வழங்கப்படுகின்றன.

ஆரம்பகாலங்களில் அங்கத்தவரிடம் மாதாந்தம் 10 ரூபாய் சேமித்து அதிலிருந்து ரூபாய். 500 பெறுமதியான கடன்களை வழங்கி பின்னர் படிப்படியாக அதிகரித்து ரூபாய். 150,000 வரையிலான கடன்களை வழங்குமளவிற்கு இன்று வளர்ச்சியடைந்துள்ளன. யுத்த காலங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டபோது விவசாய உள்ளீடுகள், உரம் போன்றவற்றையும் கடன்களாக வழங்கின. தொண்டு நிறுவனங்களின் உதவியை பெற்று மண்ணெண்ணெய், நீர் இறைக்கும் இயந்திரம் போன்றவற்றை மானியமாகவும் பெற்றுக்கொடுத்தன. தரிசு நிலங்களில் தானிய செய்கைகளை ஊக்குவிக்கும் திட்டங்கள், வீட்டுத்தோட்டங்களை உருவாக்கும் திட்டங்கள் போன்றவற்றை அறிமுகப்படுத்தின.

கூட்டுறவின் ஏனைய பிரிவுகளில் இளம் தலைமுறையினரின் பங்குபற்றல் குறைவானதாக இருக்கின்றபோதிலும் சி.க.கூகளில் இளம் பெண்கள் நிர்வாக செயற்பாடுகளை செய்யக்கூடியதாக உள்ளது. இது கூட்டுறவுத்துறையை பலப்படுத்துவதோடு விளிம்புநிலை சமூகங்களில் உள்ள பெண்கள்கூட தமது ஆழுமைகளையும் வளர்த்துக் கொண்டு தான் சார்ந்த சமூகத்திலும் மாற்றங்களை கொண்டுவர உதவுகிறது. அதாவது பெண்களால் இனங்காணப்படும் பிரச்சினைகள் குடும்பம் மற்றும் சமூகம் ஆகிய இரண்டையும் பிரதிபலிப்பதாக உள்ளது. அதற்கான தீர்வுகளை அவர்கள் நாடும்போது குடும்பத்தில் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த சமூகத்திலும் மாற்றங்கள் உருவாகிறது.

### கூட்டு முயற்சிகளும் ஆழுமை விருத்திகளும்

யுத்தத்திற்கு பின்பு அரசாங்கத்தினதும் தொண்டு நிறுவனங்களினதும் வாழ்வாதார திட்டங்கள் நுண்நிதியை கொடுத்து சுயதொழிலை ஊக்குவித்து அவர்கள் முயற்சியாளர்களாக வரலாம் எனும் மாயையை உருவாக்கி கடனாளிகளாக்கியது. இங்கு பொதுவான வளங்கள் இல்லாமல் இருப்பது பெரும்பாலான வாழ்வாதார முயற்சிகளுக்கு தடையாக இருக்கிறது. ஆனால் பெண்கள் இணைந்து நுண்நிதி கடன்களுக்கான ஒரு மாற்றுத்தீர்வாக சி.க.கூகளை மாற்றியுள்ளார்கள். தமக்கான நிதி மற்றும் வளங்களை கூட்டாக அனுகுவதற்கான முயற்சிகளை தொடர்ந்து இந்த அமைப்புகளுக்கூடாக முன்னெடுக்கிறார்கள்.

சமாசங்களால் தொழில் பயிற்சிகள் குறிப்பாக தையல், பூவேலை, வீட்டுத்தோட்டம் செய்தல், சிகை அலங்காரம் மற்றும் கேக் ஐசிங் போன்றன வழங்கப்பட்டன. இந்த பயிற்சிகளை பெற்ற பெண்கள் பின்னர் சங்கத்தில் கடனை பெற்று தமது தொழில்முயற்சிகளை சிறியளவில் ஆரம்பிக்கும் நிலமையும் இருந்தது. மேலும் கலை கலாச்சார நிகழ்வுகளை முன்னெடுப்பதால் தமது கருத்துக்களை பலபேர் முன்னிலையில் வெளிப்படுத்துதல், தமது பிரச்னைகளை வெளியே சொல்வதற்கான ஒரு பொது வெளி என்பன பெண்களுக்கு கிடைக்கிறது. இது அவர்களது ஆழுமைகளை வளர்த்துக்கொள்வதற்கு பெரியளவில் உதவுகிறது. பெரும் மருத்துவ அனர்த்தம் மற்றும் பொருளாதார வீழ்ச்சியின் மத்தியில் பெண்களின் பங்களிப்பு குடும்ப பொருளாதாரத்திற்கு மிகவும் அவசியமானதாக உள்ள நிலையில் அவர்கள் தாங்களாக கூட்டாக இணையும்போது கூட்டுறவுத்துறையும் அவர்களின் வளர்ச்சிக்கு கை கொடுக்க முன்வரவேண்டும். யுத்தத்திற்கு முன்பு ஆயிரக்கணக்கில் இருந்த சி.க.கூகளில் 580 சங்கங்களே தற்போது வடமாகாணத்தில் இயங்கிக் கொண்டுள்ளன. இயங்காத நிலையில் உள்ள சங்கங்கள் இயங்க வைக்கப்பட வேண்டும். புதிதாகவும் உருவாக்கப்பட வேண்டும். மேலும் பெண்களுக்கான கடன் திட்டங்களை விரிவுபடுத்துதல், உற்பத்தி ஆலைகளை உருவாக்குதல் மற்றும் சந்தைப்படுத்தல் உதவிகளை செய்தல் போன்ற காலத்திற்கு ஏற்றவகையிலான உதவிகளை வழங்க கூட்டுறவுச் சங்கங்கள் முன்வரவேண்டும்.



**கட்டுரையாளர்: உதவி ஆய்வாளர், வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி**

# நினைவேந்தலில் வெளிப்படுத்தப்பட்ட கூட்டுரிமை



**அ.நிக்ஸன்**

தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும், கடந்த சனிக்கிழமை மாவீரர் நினைவேந்தல் வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன. பொது மக்களும் தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளும் நிகழ்வுகளில் பங்கேற்றனர். இராணுவத்தின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் மக்கள் நினைவேந்தல் நிகழ்வுகளில் ஈடுபட்டுத் தமது கூட்டுரிமையை வலியுத்தியிருக்கிறார்கள்.

ஆனால். மாவீரர் நாளுக்குரிய அடையாளங்கள் எதுவுமே பயன்படுத்தப் படவில்லை. சட்டப் பாதுகாப்போடு தமிழ்த் தேசியக் கட்சிகளின் சில பிரதிநிதிகள் இம்முறை நினைவேந்தல் நிகழ்வுகளைச் செய்து முடித்திருக்கிறார்கள் என்பதே இதன் வெளிப்பாடு.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வன்னி விழாங்குளம், புதுக்குடியிருப்பு தேவிபுரம் பிரதேசங்களில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களைத் தவிர வேறெந்தவொரு துயிலும் இல்லங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு இராணுவம் அனுமதிக்கவில்லை. அந்தத் துயிலும் இல்லங்களுக்கு முன்பாக இராணுவம் குவிக்கப்பட்டிருந்தது.

வன்னி விளாங்குளம், புதுக்குடியிருப்பு தேவிபுரம் பிரதேசங்களில் உள்ள இரண்டு மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு மாத்திரம், கெடுபிடிகளுக்குப் பின்னர் குறைந்தது ஐம்பது பேரை இராணுவம் அனுமதியளித்தது.

வன்னி விளாங்குள துயிலும் இல்லத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில். ரெலோ இயக்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் பங்குபற்றினார். அங்கு சுடர்கள் ஏற்றப்பட்டன.

யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதியில் உள்ள வேலனை சாட்டிப் பிரதேசத்தில் உள்ள துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தச் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனியின் சட்ட ஆலோசகர் சுகாஸ் உள்ளிட்ட சிலர் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

ஆனாலும் வாக்குவாதத்தின் பின்னர் இராணுவத் தடைகளையும் மீறி துயிலும் இல்லத்திற்குள் சுகாஸ் குழுவினர் சென்றுவிட்டனர். எனினும், சுடர் ஏற்ற அனுமதிக்கப்படாமல் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி இராணுவம் காவல் புரிந்தது. இராணுவம் துப்பாக்கிகளோடு புடை சூழந்து நிற்க சுகாஸ் குழுவினர் அமைதியாகத் தரையில் அமர்ந்திருந்தனர்.

வல்வெட்டித்துறை தீருவில் பிரதேசத்தில் நினைவுத் தூபி வைக்கப்பட்டிருந்த துயிலும் இல்லத்தில நினைவேந்தல் இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியில் இடம்பெற்றிருக்கிறது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் மற்றும் வேலன் சுவாமிகள் ஆகியோர் உள்ளிட்ட பிரதிநிதிகள் என 50 பேர் கலந்துகொண்டு கூட்டுரிமையை வெளிப்படுத்தியிருந்தனர்.

பொதுமக்கள் அனுமதிக்கப்படவில்லை. ரணில்- மைத்திரி அரசாங்கத்தின்போது யாழ்ப்பாணம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளை அதற்குரிய அடையாளங்களுடன் நடத்தி வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் இம்முறை பருத்துறைக் கடற்கரையில் காணி ஒன்றில் நினைவேந்தல் நிகழ்வை நடத்தியிருக்கின்றனர்.

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து,ரவிகரன் நந்திக்கடலில் கடலுக்குள் சிவப்பு, மஞ்சள் பூக்களைத் தூவி வணக்க நிகழ்வுகளில் ஈடுபட்டார்.

முன்னாள் வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் யாழ்ப்பாணத்தில் தனது வீட்டில் சுடர் ஏற்றினார். முல்லைத்தீவு கடற்கரையில் சுடர் ஏற்றுவதற்காகத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயல்குழு உறுப்பினரும் இளைஞர் முன்னணியின் பொருளாளருமான பீற்றர் இளஞ்செழியன் அவரது மனைவி மற்றும் பலரும் சென்ற போது முல்லைத்தீவு கடற்கரையில் வைத்து பொலிசார் கைது செய்துள்ளனர். அவருடைய மனைவியைத் தள்ளி விழுத்தினர்.

ஆனாலும் தடைகளுக்கு மத்தியிலும் குறித்த இடத்திலிருந்து சுடர்களை தாங்கியவாறு முல்லைத்தீவு கடற்கரைக்குச் சென்ற பொதுமக்கள் முல்லைத்தீவு கடற்கரையில் சரியாக ஆறு மணிக்குப் பொதுச் சுடர் ஏற்றினர். தொடர்ந்து அகவணக்கம் செலுத்தினர்.

அதேவேளை, யாழ் மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணண், யாழ் மத்திய பகுதியில் உள்ள ஆரிய குளத்தில் 27 மின் விளக்குகளை ஏற்றி அமைதியான முறையில் அந்த நிகழ்வை செய்திருக்கிறார். குளத்தைச் சுற்றி வாகை மரங்களும் நடப்பட்டுள்ளன.

புனரமைக்கப்பட்ட ஆரியகுளத்திற்கு மின் பாய்ச்சும் நிகழ்வு என்று தலைப்பிட்டிருந்தாலும், மாவீரர் நினைவேந்தல் நேரத்தில் செய்யப்பட்டது. ஆரியகுளம் புனரமைப்புத் தொடர்பாக எழுந்த விமர்சனங்களுக்கும் அவர் முற்றுப் புள்ளியிட்டிருக்கிறார்.

மாவீரர் நினைவேந்தல்களை அதற்குரிய அடையாளங்களைத் தவிர்த்து நடத்த முடியுமென முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. ஆனால், யாழ் நீதிமன்றம் அவ்வாறான உத்தரவைப் பிறப்பிக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் மாவீரர் நாளுக்குரிய அடையாளங்கள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்சிக் கொடிகளில் சிவப்பு- மஞ்சள் நிறம் இருக்கின்றது. ஆகவே கட்சிக் கொடியைக் கூட இவர்கள் ஏன் பயன்படுத்தவில்லை என்ற கேள்விகளும் உண்டு.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா அமர்வில் இலங்கையை மேலும் பாதுகாக்கக்கூடிய ஏற்பாடுகளில் அரசாங்கம் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றது. இதனால் இம்முறை மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளில் பெருமளவு கெடுபிடிகளைச் செய்ய அரசாங்கம் விரும்பியிருக்கவில்லை என்பது நீதிமன்றத் தீர்ப்புகள் மூலம் வெளிப்பட்டுள்ளன.

இராணுவம் வழமைபோன்று கெடுபிடிகளில் ஈடுபட்டாலும், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரையும் கைது செய்ய முற்படவில்லை அப்படிக் கைது செய்யப்பட்டிருந்தால், அது அடுத்த கட்ட சாத்வீகப் போராட்டத்துக்கான உந்துதலாக மாறிவிடுமோ என்ற ஓர் அச்சம் அரசாங்கத்திடம் இல்லாமலில்லை.

ஆனாலும் தொடர்ந்து அச்சுறுத்துவோம் என்ற அடையாளத்துக்காகவே பீற்றர் இளம் செழியன் மாத்திரம் கைது செய்யப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்க செய்யப்பட்டிருக்கிறார்.

2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், கோட்டாபய ராஜபக்ஷ தனது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பத்து அம்சக் கொள்கை ஒன்றைப் பிரகடனம் செய்திருந்தார்.

அதில் முதலாவதாகத் தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை என்றும் பத்தாவதாக சட்டத்தை மதிக்கக் கூடிய ஒழுக்க நெறியுடைய குணநலம் கொண்ட சமூகத்தை உருவாக்குதல் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஈழத்தமிழர்களைத் தனது சிங்களப் பெரும்பான்மைப் பொலிஸார் மற்றும் முப்படைகளூடாகவும் இலங்கை ஒற்றையாட்சி அரசின் சட்டங்களை மதிப்பவர்களாக ஒழுக்கப்படுத்தல் (disciplining) என்பதும் அதன் உட்பொருளாகும்.

தான் பதவிக்கு வந்தபோது சொன்ன மேற்குறித்த விடயத்தையே 2019/20 ஆம் ஆண்டு நவம்பர் மாதங்களில் நிறுவ முற்பட்டிருந்தார். ஆனால், இந்த ஆண்டு மாவீரர் நினைவேந்தலுக்குரிய அடையாளங்கள் தவிர்க்கப்படடமை, கோட்டாபய ராஜபக்ஷவின் ஒழுங்குபடுத்தலுக்குள் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் தாமாகவே அடங்கிவிட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

1979ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச் சட்டக் கோவை பொலிஸ் சட்டக் கோவை (Police Ordinance), 2007ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சமவாயச் சட்டத்தின் (ICCPR Act) பிரிவுகள் போன்றவற்றையும் ஒன்றுடன் ஒன்று தொடுத்து தனது ஒழுக்கப்படுத்தலை கோட்டாபய நடைமுறைப்படுத்தியிருக்கிறார்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில், ஈழத்தமிழர்கள் தமது மாவீரர்களுக்கான கூட்டு நினைவேந்தலைப் பகிரங்க நிகழ்வுகளாக முன்னெடுக்கக்கூடாது என்பது அரசின் நிலைப்பாடாக மாறியுள்ளது.

நினைவேந்தலுக்குரிய குறியீடுகள் இந்த ஆண்டு தவிர்க்கப்பட்டமை அந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறது. அரசு தனது அரசியல் சட்டங்களை அதீதமாகப் பயன்படுத்துவதே அதற்குக் காரணமா என்பதைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் பகிரங்கப்படுத்த வேண்டும்.

அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து ஒரு பொதுக்குழுவை உருவாக்கி அந்தப் பொதுக் குழுவின் செயல்பாடுகள் மூலம் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தியிருக்கலாம்.

தமிழ்த் தேசியக் கட்சிகள், ஒரு தேசமாக எழுந்து தேர்தல் அரசியலைக் கடந்து ஒரே குரலில் ஒரே தேசமாகச் செயற்படுவதற்கான காலம் வரும் என்று இனிமேல் நம்புவதற்கில்லை. ஆகவே சிவில் சமூக அமைப்புகள் எழுச்சி பெற வேண்டுமென்பதே காலத்தின் கட்டாயமாகின்றது. ■


> **“மாவீரர் நினைவேந்தல்களை அதற்குரிய அடையாளங்களைத் தவிர்த்து நடத்த முடியுமென முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. ஆனால், யாழ் நீதிமன்றம் அவ்வாறான உத்தரவைப் பிறப்பிக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் மாவீரர் நாளுக்குரிய அடையாளங்கள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.**

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - II நேரம் : 1 மணித்தியாலம்

**❖ 30 தொடக்கம் 59 வரையான வினாக்களிற்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

30) 
பின்வரும் செயற்பாடானது சூரிய நமஸ்காரச் செயற்பாட்டில் எப்படிமுறையில் அடங்கும்?
1) 5ம் 2) 4ஆம் 3) 8ஆம்

31) உடைந்த கண்ணாடிக் கழிவுகளை இடவேண்டிய குப்பைத் தொட்டியின் நிறம் யாது?
1) சிவப்பு 2) நீலம் 3) செம்மஞ்சள்

32) இலங்கையின் தேசிய மலர் எது?
1) நாகமலர் 2) நீலோற்பலம் 3) தாமரை

33) விவசாயிகள் அரிவிவெட்டப் பயன்படுத்துவது எது?
1) அரிவாள் 2) கத்தி 3) மண்வெட்டி

34) மென்மையான தண்டினைக் கொண்ட தாவரமாகக் கருதக்கூடியது.
1) கத்தரி 2) மூங்கில் 3) வெற்றிலை


35) வெண்டிக்காயின் நெற்றுக்களை நீரிலிட்டால் யாது நிகழும்?
1) மிதக்கும் 2) அமிழும் 3) நீரில் கரையும்

36) பாதுகாப்பிற்காகத் தோலின் நிறத்தை மாற்றக் கூடிய பிராணி எது?
1) பல்லி 2) ஓணான் 3) ஆமடில்லா

37) 
இவ்வலங்காரம் எவ்வாறு அழைக்கப்படும்.
1) மொசைக் 2) ஓரிகாமி 3) கொடி அலங்காரம்

38) கொப்பளிப்பான் நோயைப் பரப்பும் நோய்க்காவி.
1) இலையான் 2) நுளம்பு 3) ஆட்கள்

39) வாகை, விளா என்பன பூக்கும் மாதம் எது?
1) ஆவணி 2) ஆனி 3) பங்குனி

40) 
இச் செயற்பாட்டின் போது நல்ல முட்டை மிதப்பதை அவதானிக்கலாம் எனின் இக்குவளையிலுள்ள நீர் யாது?
1) சாதரணநீர் 2) வெந்நீர் 3) உப்புநீர்

41) கல்லீரல் அழற்சி ஏற்படுவதற்கான காரணம் யாது?
1) அதிக உறைப்பான உணவுகளை உண்ணல்.
2) அசுத்த நீரைப் பருகுதல்
3) எண்ணெயில் பொரித்த உணவுகளை அதிகம் உண்ணல்.

42) இலங்கைக்கே உரித்தான முலையூட்டிகளானவை.
1) சுண்டெலி, மரநாய் 2) புலத்ஹய்யா, மர்புளுட்டா
3) கொம்பு ஓணான், சபன் கோழி

43) வீட்டில் தனிப்பட்ட வகையில் பயன்படுத்தக் கூடிய பொருட்களாவன.
1) துவாய், பற்றூரிகை 2) மின்னழுத்தி, கதிரை 3) அடுப்பு, தும்புத்தடி

44) நிலக்கரி பயன்படுத்தப்படுவது?
1) நீர் மின் உற்பத்தி 2) அனல் மின் உற்பத்தி 3) எரிவாயு அடுப்பு


45) பசியின்மை, உதடுகளின் இணைப்பு ஓரங்களில் வெடிப்புகள் தோன்றுதல், வயிற்றில் எரிச்சல் போன்ற நோய்கள் ஏற்படுவதற்கு எப்போசாக்கு குறைபாடு காரணமாகும்?
1) விற்றமின் A 2) விற்றமின் D 3) விற்றமின் B

46) மின்னல் தாக்கம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பமாகக் கருதக்கூடியது?
1) மகிழுந்தினுள் அமர்ந்தவாறு பயணம் செய்தல்.
2) திறந்த வெளியில் நிற்றல்.
3) வீட்டினுள் கதிரை மீது அமர்ந்திருத்தல்.

47) வெந்நீர் கேத்தல் புரண்டதால் ஏற்பட்ட எரிகாயத்திற்கு அளிக்கக்கூடிய முதலுதவி யாது?
1) பற்பசைக் களிம்பு பூசுதல்
2) காயம் ஏற்பட்ட இடத்தில் எண்ணெய் பூசுதல்
3) காயம் ஏற்பட்ட இடத்தில் தண்ணீரை வழிந்தோடுமாறு ஊற்றுதல்

48) வித்துக்களை நடுவதற்கு முன் நீரில் ஊற வைப்பதற்கான காரணம் யாது?
1) வித்திலுள்ள அழுக்குகளைக் கழுவுவதற்கு.
2) வித்து முளைத்தலை விரைவுபடுத்துவதற்கு.
3) ஊற வைத்தால் மாத்திரமே வித்துக்கள் முளைக்கும் என்பதால்.


49) பெருந்தெரு, அதிவேகப்பாதை என்பவற்றை தேசப்படத்தில் குறிப்பதற்குப் பயன்படும் நிறங்கள் முறையே.
1) சிவப்பு, நீலம் 2) கறுப்பு, சிவப்பு 3) சிவப்பு, ஊதா

50) 
இம் மின்காந்தத்தின் காந்தத் தன்மையை அதிகரிக்க யாது செய்யவேண்டும்?
1) ஆணிகளை அதிகரித்தல்.
2) மின்கலங்களைக் அதிகரித்தல்.
3) கம்பிச்சுருள்களைக் குறைத்தல்.

51) சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் ஏற்படும் போது அழைக்க வேண்டிய அவசரத் தொலைபேசி இலக்கம் யாது?
1) 1990 2) 1959 3) 1929

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30) | 01 | 35) | 01 | 40) | 03 | 45) | 03 | 50) | 02 |
| 31) | 01 | 36) | 02 | 41) | 02 | 46) | 02 | 51) | 03 |
| 32) | 02 | 37) | 03 | 42) | 01 | 47) | 03 | | |
| 33) | 01 | 38) | 03 | 43) | 01 | 48) | 02 | | |
| 34) | 03 | 39) | 02 | 44) | 02 | 49) | 03 | | |

ஈழநாடு



## ஐ.தே.கவின் முன்னாள் செயலாளர் காலமானார்

கொழும்பு, டிசெ. 01

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பி. சிறிசேன குரே காலமானார்.

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்றுக் காலமானார்.

1979 முதல் 1989 வரை கொழும்பு மாநகர சபையின் மேயராகப் பதவி வகித்த அவர், 1989 இல் பிரேமதாஸ ஆட்சியில் அமைச்சுப் பதவியையும் வகித்துள்ளார். (இ)

# சு.கவை காட்டிக்கொடுத்தவர்கள் இன்று அக்கட்சிக்குத் தலைமை!

## மைத்திரி அணி மீது 'மொட்டு' கடும் விமர்சனம்

கொழும்பு, டிசெ. 01

**"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளைக் காட்டிக் கொடுத்தவர்கள்தான் இன்று அக்கட்சியை வழிநடத்துகின்றனர்."**

- இவ்வாறு கடும் விமர்சனத்தை முன்வைத்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டுள்ள அவர் இவ்வாறு, சுதந்திரக் கட்சியை விளாசித் தள்ளினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசு என்ற வகையில் நாம் சில திட்டங்களை முன்னெடுக்கையில் பின்னடைவு ஏற்படலாம். அவ்வாறு சர்ச்சைகள் உருவாகும்போது அதில் சந்தர்ப்பவாத அரசியலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நடத்தி வருகின்றது. குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க அக்கட்சியினர் முயற்சிக்கின்றனர்.

உரப்பிரச்சினையின்போது அரசுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. இந்நிலையில், இந்தத் திட்டத்துக்கு தாமும் எதிர்ப்பு என சுதந்திரக் கட்சி 'பல்டி' அடித்தது. சிலவேளை இந்தத் திட்டம் வெற்றியளித்திருந்தால் அதற்கும் தான்தான் காரணம் என மைத்திரிபால சிறிசேன உரிமை கோரி இருப்பார்.



அரசுக்குள் இருந்து கொண்டு, சிறப்புரிமைகளை அனுபவித்தபடியே அவர்கள் விமர்சிக்கின்றனர். அவர்களின் கொள்கை என்னவென்பது புரியவில்லை" - என்றார். (இ)

# சமையல் எரிவாயு வெடிப்பு விவகாரம்: சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்க!

## சபையில் எதிரணி வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 01

சமையல் எரிவாயு விவகாரம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. முஜிபுர் ரஹ்மான் பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

சமையல் எரிவாயு சிலிண்டரின் கலவையில் ஏற்பட்டுள்ள மாற்றம் கடந்த ஏப்ரல் மாதம் முதல் தொடரும் நிலையில் அது தொடர்பாக தர நிர்ணய நிறுவனங்கள் உறுதிசெய்யவில்லை என விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறிய அவர், அதனுடன், சம்பந்தப்பட்ட அனைவரையும் கைதுசெய்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சமையல் எரிவாயு சிலிண்டர்களில் கசிவு ஏற்பட்டு வெடிக்கும் நிலை நாட்டில் உருவாகி வருகின்றமை தொடர்பில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண சபையில் தெளிவுபடுத்தியதையடுத்து ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சமையல் எரிவாயு சிலிண்டர்களின் கலவையின் அளவில் மாற்றம் செய்திருப்பது தொடர்பாக தர நிர்ணய நிறுவனங்கள் உறுதிசெய்யவில்லை என அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

ஆனால், 12.5 கி.கி. சமையல்



எரிவாயு சிலிண்டர் ஒன்றில் இருக்க வேண்டிய இரசாயன அளவு தொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் முன்னாள் தலைவர் அனில் கொஸ்வத்த, நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் ப்ராடேன் 20 வீதமும், பூடென் 80 வீதமும் இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இந்தக் கடிதம் கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி அவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையால் இது தொடர்பாக கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் இரசாயனக் கூறுகள் இரண்டும் 50, 50 என உள்ளடங்குகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது" - என்றார். (இ)

# இந்து சமுத்திர மாநாட்டில் டிசெ.4 இல் ஜனாதிபதி உரை

கொழும்பு, டிசெ. 01



இந்து சமுத்திர சம்மேளனத்தின் ஆரம்ப மாநாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றவுள்ளார் என்று அமைச்சர் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்து சமுத்திர சம்மேளன மாநாடு ஐக்கிய அரசு இராச்சியத்தின் தலைநகரான அபுதாபியில் டிசெம்பர் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. 47 நாடுகள் பங்கேற்கும் இம்மாநாட்டில் ஆரம்ப உரையை நிகழ்த்துமாறு எமது ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவர் 4 ஆம் திகதி மாநாட்டில் உரையாற்றுவார்" - என்றார். (இ)

# இந்து சமுத்திர மாநாட்டுக்கு ரணிலுக்கும் வந்தது அழைப்பு

## டிசெம்பர் 5ஆம் திகதி உரை



கொழும்பு, டிசெ. 01

இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க எம்.பிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

5ஆவது இந்து சமுத்திர மாநாடு எதிர்வரும் டிசெம்பர் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதிவரை அபுதாபியில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்கே ரணிலுக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மாநாட்டில் பங்கேற்கும் ரணில் விக்கிரமசிங்க டிசெம்பர் 5 ஆம் திகதி உரையாற்றுவார். 2016 - 2019 காலப்பகுதியில் குறித்த மாநாட்டின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி

# பண மோசடி செய்து ஏமாற்றும் முகவர்கள்

கண்டி, டிசெ.01

வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி அவர்களை நிர்க்கதியாக்கும் ஏமாற்று வெளிநாட்டு முகவர்கள், இடைத்தரகர்கள் குறித்து மலையகப் பகுதிகளில் பரவலாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு ஏமாற்றப்படும் பெண்களிடம் பெருந்தொகைப் பணத்தையும் கடவுச்சீட்டுகளையும் பெற்றுக்கொண்டு அந்நபர்கள் தலைமறைவாகி விடுகின்றனர் என்றும் சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் இந்த மோசடிச் செயல்பாடு அடிக்கடி செய்யப்பட்ட முறைப்பாடுகளையடுத்து அம்பலத்துக்கு வந்துள்ளது.

இவ்வாறு ஏமாற்றத்துக்குள்ளாகும் இப்பிரதேச பெண்கள் தாம் ஏமாற்றப்பட்ட பின் இந்த விடயமாகப் பொலிஸ் நிலையம் மற்றும் தொழில்சங்கப் பிரதிநிதிகளுக்கு அறிவித்ததையடுத்து இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி மோசடி பேர்வழிகளால் இவ்வாறு மலையகப் பெண்கள் பலர் ஏமாற்றப்பட்டு வருவதால் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மூலம் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அப்பாவிப் பெண்கள் இவ்வாறான மோசடிக் கயவர்களிடம் சிக்கித் தவிப்பதாக இப்பிரதேச சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# 'யுகதனவி' பயன் இல்லையேல் நான் ஆதரவு வழங்கமாட்டேன்

## பாராளுமன்றில் மஹிந்தானந்த உறுதி

கொழும்பு, டிசெ. 01

"யுகதனவி ஒப்பந்தம் நாட்டுக்கு நன்மை பயக்காவிடின் அரசில் அங்கம் வகித்தாலும் அதற்கு ஆதரவு வழங்க முடியாது என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

டீசல் நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சார அலகொன்றுக்கு 25 ரூபாய்



செலவாகின்றது.


அதேபோல், எல்.என்.ஜியில் உற்பத்தி செய்யப்படும் மின்சார அலகு ஒன்றுக்கு 18 ரூபாய்க்கு மேல் செலவாகும் பட்சத்தில் அதற்கு அனுமதி வழங்க முடியாது. இது தொடர்பில் சகல தரப் பினரும் உரிய அவதானத்தைச் செலுத்த வேண்டும்.

எனவே, நன்மையற்ற நிபந்தனைகளுக்கு அரசு இணங்கக் கூடாது. அதனை சர்வாதிகாரப் போக்குடைய நிறுவனத்துக்குக் கையளிக்கக் கூடாது" - என்றார். (இ)

ஈழநாடு



# ருவிட்டரின் புதிய தலைமை அதிகாரியானார் இந்தியர்!



புதுடில்லி, டிசெ. 01

ருவிட்டர் நிறுவனத்தின் புதிய தலைமை அதிகாரியாக இந்தியரான பராக் அகர்வால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டுவிட்டர் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ஜாக் டோர்சி நேற்று அந்த பதவியை இராஜினாமா செய்த நிலையில், ருவிட்டர் நிறுவ னத்தின் அடுத்த தலைமை அதிகாரி யார் என்பது குறித்து பல்வேறு தகவல்கள் பரவி வந்தன.

இந்தியாவை பூர்விகமாக கொண்ட பராக் அகர்வால் மும்பை ஐ.ஐ.டி.யில் படித்தவர். இவர் 10 ஆண்டுகளுக்கு முன்னர் ருவிட்டர் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார்.

டுவிட்டரில் ஆயிரத்துக்கும் குறைவான பணியாளர்கள் இருந்தபோது பணியில் சேர்ந்த பராக், கடின உழைப்பால் படிப்படியாக பதவி உயர்வு பெற்று தற்போது அந்த நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக உயர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பிரிட்டனில் முகக்கவசம் மீண்டும் கட்டாயமானது

லண்டன், டிசெ. 01

ஒமைக்ரோன் மாறுபாட்டின் பரவலை கட்டுப்படுத்தும் முகமாக பிரிட்டனில் பொது போக்குவரத்து மற்றும் கடைகளில் முகக்கவசம் அணிவது மீண்டும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மேலும் வெளிநாட்டில் இருந்து பிரிட்டன் வருபவர்களும் பி.சி.ஆர். பரிசோதனை செய்து, எதிர்மறையான முடிவைப் பெறும் வரை தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒமைக்ரோன் மாறுபாட்டுடன் 11 நோயாளிகள் பிரிட்டனில் கண்டறியப்பட்ட நிலையில் இந்த புதிய கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் நாட்களில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக சுகாதாரத்துறை செயலாளர் சஜித் ஜாவிட் தெரிவித்தார்.



# 100 கோடி தடுப்பூசிகளை ஆபிரிக்காவுக்கு வழங்கும் சீனா

பீஜிங், டிசெ. 01

சுமார் ஒரு பில்லியன் கொரோனா தடுப்பூசிகளை ஆபிரிக்காவுக்கு வழங்கவுள்ளதாக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உறுதியளித்துள்ளார்.

சீன - ஆபிரிக்க உச்சிமாநாட்டின்போது சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

100 கோடியில் , 60 கோடி டோஸ்கள் நேரடியாகவும் 40 கோடி டோஸ்கள் நிதி வழங்கும் நிறுவனங்கள் ஊடாகவும் வழங்கப்படும் என்றும் அவர் அறிவித் துள்ளார்.

சீனா ஏற்கனவே ஆபிரிக்க நாடுகளுக்கு கொரோனா தடுப்பூசிகளை வழங்கி வருகிறது.

இந்நிலையில் தற்போது தென்னாபிரிக்காவில் முதன் முதலில் கண்டறியப்பட்ட புதிய ஒமைக்ரோன் வைரஸ் மாறுபாட்டின் பரவலுக்கு மத்தியில் சீனா இதனை அறிவித்துள்ளது. (அ)

# பிரான்ஸின் முதல் ஒமைக்ரோன் தொற்றாளர் ரியூனியன் தீவில்!

## மொசாம்பிக்கில் இருந்து வந்த பெண்ணே அவர்



பாரிஸ், டிசெ. 01

பிரான்ஸில் ஒமைக்ரோன் தொற்று என்ற சந்தேகத்தில் சுமார் ஒரு டசின் தொற்றாளர்களது மாதிரிகள் மேலதிக ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் உறுதிப்படுத்தப்பட்ட முதலாவது தொற்றாளர் கடல் கடந்த நிர்வாகப் பிரதேசமாகிய ரியூனியன் தீவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

55 வயதுடைய பெண்ணாகிய அவர் ஆபிரிக்க நாடாகிய மொசாம்பிக்கில் இருந்து தென்னாபிரிக்கா வழியாக ரியூனியன் தீவுக்கு வந்தவர் என்பதை ”வெப்பமண்டலத் தீவுகளில் தொற்று செயல்முறை ஆராய்ச்சிக்கான கூட்டுப் பிரிவு” உறுதிப்படுத்தி உள்ளது.

தசைநார் வலி மற்றும் களைப்பு அறிகுறிகளுடன் உள்ள அந்தப் பெண்ணும் அவரோடு தொடர்புகளை வைத்திருந்தவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தீவில் உள்ள தொற்றுநோய் நிபுணர் ஒருவர் பாரிஸ் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மூன்றாவது தடுப்பூசி ஏற்றுகின்ற திட்டங்களை பிரான்ஸ் உட்பட ஐரோப்பிய நாடுகள் பலவும் முடுக்கிவிட்டுள்ளன. ஒரு வார காலப்பகுதிக்குள் சுமார் முப்பது லட்சம் பேர் தங்களது மூன்றாவது ஊசிக்கான முன்பதிவுகளை செய்துள்ளனர் என்ற தகவலை பிரான்ஸின் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதிபர் இமானுவல் மக்ரோன் தனது மூன்றாவது டோஸை கடந்த சனிக்கிழமை பெற்றுக் கொண்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஒமைக்ரோன் வைரஸின் மரபு இயல்புகளைக் கண்டறிந்து அதற்கு எதிரான தடுப்பூசி ஒன்றை ஆயத்தம் செய்கின்ற ஆய்வுகள் துரித கதியில் நடைபெறுவதாக அமெரிக்கா - ஜேர்மனி கூட்டு நிறுவனமாகிய 'பைசர்-பயோஎன்ரெக்' அறிவித்திருக்கிறது. அடுத்த நூறு நாட்களில் புதிய ஊசியைத் தயாரித்து வெளியிடுகின்ற வசதிகள் தங்களிடம் இருப்பதாக அது தெரிவித்துள்ளது.

லண்டனில் கூடிய ஜீ-7 நாடுகளின் சுகாதார அமைச்சர்களது அவசர மாநாடு, மிக வேகமாகப் பரவக்கூடிய ஒமைக்ரோன் திரிபை எதிர்கொள்ள உலக அளவில் அவசர தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று அறிக்கை விடுத்துள்ளது.

வட அமெரிக்காவில் முதலாவது ஒமைக்ரோன் தொற்றாளர் கனடாவில் கண்டறியப்பட்டிருக்கிறார். இந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் உரையாற்றிய அதிபர் ஜோ பைடன், 'தற்போதைய ஆரம்ப நிலையில் ஒமைக்ரோன் திரிபு குறித்துப் பதற்றப்படுவதற்குக் காரணங்கள் இல்லை' என்று கூறியிருக்கிறார். பூரணமாகத் தடுப்பூசி ஏற்றியவர் கள் மாஸ்க் அணிந்து கொண்டால் உள்ளிருப்பு அவசியம் இல்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். (அ)

# 2021ஆம் ஆண்டுக்கான வார்த்தையாக 'தடுப்பூசி'

நியூயோர்க், டிசெ. 01

இந்த ஆண்டுக்கான வார்த்தையாக, 'தடுப்பூசி' என்ற வார்த்தையை, 'மெரியம் வெப்ஸ்டர்' நிறுவனம் தேர்வு செய்துள்ளது.

அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் மாகாணத்தை தலைமையிடமாக வைத்து இயங்கும் மெரியம் வெப்ஸ்டர் நிறுவனம் 'டிக்ஷனரி' எனப்படும் அகராதிகளுக்கு பெயர் பெற்றது.

இந்த நிறுவனம் ஆண்டுதோறும் ஒரு வார்த்தையை தேர்வு செய்து, சிறந்த வார்த்தையாக அறிவித்து வருகிறது. கடந்த 2020ஆம் ஆண்டு 'பண்டமிக்' எனப் படும் பெருந்தொற்றை குறிப்பிடும் வார்த்தை தேர்வு செய்யப்பட்டது.

இந்நிலையில் இந்த ஆண்டிற்கான வார்த்தை தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ளது. 'Vaccine' எனப்படும் தடுப்பூசியை குறிப்பிடும் வார்த்தையை மெரியம் வெப்ஸ்டர் நிறுவனம் தேர்வு செய்துள்ளது.

இதுகுறித்து, மெரியம் வெப்ஸ்டர் நிறுவன ஆசிரியர் பீட்டர் சோகோலோஸ்கி கூறியதாவது:

இந்த ஆண்டில் தடுப்பூசி என்ற வார்த்தை அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக இந்த ஆண்டின் வார்த்தையாக அது தேர்வு செய்யப்பட்டுள்ளது-என்றார்.





# அரசியல் விவாத நிகழ்ச்சியில் அழையா விருந்தாளியாக பூனை

ஜோர்ஜியாவில் அரசியல் தொடர்பாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் அந்த நாட்டின் பிரபல தொலைக்காட்சியில் விவாத நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்பப்பட்டது.

நாடு முழுவதும் இருந்து ஆயிரக்கணக்காணோர் இந்த நேரடி விவாத நிகழ்ச்சியை பார்த்துக்கொண்டிருந்தனர்.

நிகழ்ச்சி தொகுப்பாளர் ஜோர்ஜியா அரசியல் குறித்து அரசியல்வாதி ஒருவரிடம் நிகழ்ச்சி அரங்கில் விவாதம் நடத்திக்கொண்டிருந்தார்.

அப்போது, திடீரென விவாத மேடை மீது பூனை ஒன்று தாவி அமர்ந்தது. இதனால், சற்று அதிர்ச்சியடைந்த நிகழ்ச்சி தொகுப்பாளர் உடனடியாக, இது எங்கள் செல்லப்பிராணி பூனை ககுஷ்சா. இவர் நமது விவாதத்தில் கலந்துகொள்ளமாலா? என்று விவாத பங்கேற்பாளரிடம் கேட்டார். மேலும், ககுஷ்சா மிகவும் நல்ல செல்லப்பிராணி, ஆனால், நாம் மீண்டும் விவாதத்திற்கு திரும்பவேண்டும் என நினைக்கிறேன்-என்றார்.

ககுஷ்சா நீ தயவு செய்து கிழே இறங்கு என்றார். அப்போது, விவாத நிகழ்ச்சி நேரலையில் ஒளிபரப்பாகிக்கொண்டா இருக்கிறது? என்று நிகழ்ச்சியில் பங்கேற்ற அரசியல்வாதி கேள்வி எழுப்பினார்.

ஆம், நிகழ்ச்சி நேரலையில் ஒளிபரப்பாகிக்கொண்டிருக்கிறது. ஆனாலும், பரவாயில்லை என்று நிகழ்ச்சி தொகுப்பாளர் பதிலளித்தார். (அ)

## மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட்:

# பெருமாளின் பந்துவீச்சில் சுருண்டது இலங்கை அணி!




*காலி, டிசெ. 01*

இரண்டாம் நாளில் இலங்கை அணியின் 9 விக்கெட்களை 91 ஓட்டங்களுக்கு வீழ்த்தியது மேற்கிந்தியத்தீவுகள் அணி. இதனால், இரண்டாவது டெஸ்டின் முதல் இனிங்ஸில் 204 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றது. இதில், அபாரமாக பந்துவீசிய வீராசாமி பெருமாள் 5 விக்கெட்களையும் வரிகன் 4 விக்கெட்களையும் கைப்பற்றி அசத்தினர்.

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள், காலியில் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று நடந்தது.

முதல்நாள் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டிருந்தது. மதியம் 2.30 மணிக்கு பின்னர் தொடங்கிய போட்டியில் 34.4 ஓவர்கள் வீசப்பட்டன. இலங்கை ஒரு விக்கெட்டை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பதும் நிசங்க 61 ஓட்டங்களுடனும், ஒஸத பெர்னாண்டோ 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று இவர்கள் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர். ஒஸத பெர்னாண்டோ 18 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து 73 ஓட்டங்களுடன் பதும் நிசங்க எல். பி. டபிள்யூ முறையில் ஆட்டிழந்து வெளியேறினார். அஞ்சலோ மத்தியூஸ் ஒருபுறம் களத்தில் நின்ற போதும் மறுமுனையில் வந்த வீரர்கள் வேகமாக விக்கெட் களைப் பறிகொடுத்தனர்.

காயத்துடன், நின்று போராடிய மத்தியூஸாலும் தாக்குப்பிடிக்க முடியாது போகவே, இறுதி விக்கெட்டாக வரிகனின் பந்தில் மத்தியூஸ் ஆட்டமிழந்தார்.

இதனால், இலங்கை அணி 61.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு கிராக் பிராத்வெயிற், ஜெர்மைன் பிளக்வூட் இணை தொடக்கம் கொடுத்தது. இந்த இணை சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தியது. பிளக்வூட் 99 பந்துகளை எதிர்கொண்டு 5 பௌண்ட்ரிகளுடன் 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

29.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 69 ஓட்டங்களை மேற்கிந்தியத் தீவுகள் அணி பெற்ற நிலையில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இதற்கு முன்னரும் ஆட்டத்தில் மழை குறுக்கிட்டதால் அதிக ஓவர்கள் வீசப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பந்துவீச்சில் பிரவீன் ஜெயவிக்கிரம ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டமாகும். (ஐ)

# பங்களாதேஷுடனான டெஸ்ட் பாகிஸ்தான் அணி இலகு வெற்றி

*டாக்கா, டிசெ. 01*

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது பாகிஸ்தான் அணி.

பாகிஸ்தான் அணி பங்களாதேஷுக்கு சென்று 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரிலும், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரிலும் விளையாடுகின்றது.

இதில் இருபது - 20 தொடரை 3 - 0 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 330 ஓட்டங்கள் எடுத்தது. பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸில் 286 ஓட்டங்களைப் பெற்றது.

எனினும் 2ஆவது இனிங்ஸில் பங்களாதேஷ் அணியை 157 ஓட்டங்களுக்கு பாகிஸ்தான் ஆட்டமிழக்கச் செய்தது. இதனால் முதல் டெஸ்டில் வெற்றி பெற பாகிஸ்தானுக்கு 202 ஓட் டங்கள் இலக்கானது.

பாகிஸ்தான் அணி, 58.3 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 203 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

அபித் அலி 91 ஓட்டங்களும், அப்துல்லா ஷபிக் 73 ஓட்டங்களும் எடுத்தனர். இதனால் முதல் டெஸ்டை 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்றுள்ள பாகிஸ்தான் அணி, டெஸ்ட் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது. அபித் அலி, ஆட்ட நாயகனாகத் தேர்வானார்.

2-வது டெஸ்ட் போட்டி டிசெம்பர் 4 அன்று தொடங்குகிறது. (ஐ)






## 'பலோன் டி ஓர்' விருது:

# 7ஆவது முறையாக மெஸ்ஸி வசமானது

*பாரிஸ், டிசெ. 01*

ஆர்ஜென்ரீனா மற்றும் பாரிஸ் சென். ஜெர்மைன் அணிகளுக்காக விளையாடும் லயனல் மெஸ்ஸி 'பலோன் டி ஓர்' விருதை ஏழாவது முறையாக வென்று, சாதனை படைத்தார்.

34 வயதான மெஸ்ஸி, தனது கோபா அமெரிக்கா கிண்ணத்தை ஆர்ஜென்ரீனா வெல்வதற்கு உதவினார். அத்துடன், 2021ஆம் ஆண்டில் 40 கோல்களை அடித்துள்ளார். இதில் பார்சிலோனாவுக்காக 28, பாரிஸ் சென். ஜெர்மைன் 4, ஆர்ஜென்ரீனாவுக்காக 8 கோல்களும் அடித்துள்ளார்.

உலகெங்கிலும் உள்ள 180 பத்திரிகையாளர்களால் பலோன் டி ஓர் விருதுக்கு வாக்கு அளிக்கப்பட்டு விருதுக்கு உரியவர் தெரிவு செய்யப்படுகின்றார். கொரோனா தொற்று காரணமாக கடந்த ஆண்டு விருது வழங்கப்படவில்லை.

2008 - 2019 வரையான காலப்பகுதியில் மெஸ்ஸி, கிறிஸ்ரியானோ ரொனால்டோ (5 தடவைகள்) மாறிமாறி விருதை வென்றனர். எனினும், 2018ஆம் ஆண்டு குரோஷியாவின் லூகா மோட்ரிக் வென்றிருந்தார்.

மெஸ்ஸி எந்த வீரரையும் விட அதிக தடவைகள் விருதை வென்றுள்ளார். 2009, 2010, 2011, 2012, 2015, 2019 ஆம் ஆண்டுகளின் பின்னர் ஏழாவது ஆண்டாக இந்த ஆண்டும் விருதைக் கைப்பற்றியுள்ளார்.

பாரிஸ் தியேட்டர் டு சாட்லெட்டில் நடந்த விருது வழங்கும் நிகழ்வில், "மீண்டும் இங்கு இருப்பது நம்ப முடியாதது. இரு ஆண்டுகளுக்கு முன்பு இது கடைசி முறை என்று நான் நினைத்தேன். நான் எப்போது ஓய்வு பெறப் போகிறேன் என்று மக்கள் என்னிடம் கேட்கத் தொடங்கினர். ஆனால், நான் இப்போது இங்கு -பாரிஸில் இருக்கிறேன். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்", என்றார். (ஐ)



# மகளிர் 'பலோன் டி ஓர்' விருது; அலெக்சியா புட்ரெலாஸ் வசம்!

*பாரிஸ், டிசெ. 01*

பெண்களுக்கான பலோன் டி ஓர் விருதை பார்சிலோனா அணியின் தலைவியான (ஸ்பெய்ன்) அலெக்சியா புட்ரெலாஸ் வெற்றிபெற்றார்.

27 வயதான புட்ரெலாஸ் கோல் அடித்ததால செல்சீ அணியை 4 - 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி சம்பியன்ஸ் லீக்கின் பட்டத்தைக் கைப்பற்றியது.

இந்த ஆண்டு நடுவரிசையில் ஆடும் அலெக்சியா 26 கோல்களை அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மேலும் 347 பேர் குணமடைவு

கொழும்பு, டிச. 01

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 347 பேர் குணமடைந்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் விஞ்ஞானப் பிரிவு நேற்று வெளியிட்டுள்ள நாளாந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 40 ஆயிரத்து 387 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 8 ஆயிரத்து 552 பேர் சிகிச்சை மையங்களிலும் வீடுகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ)






# “எங்கே எங்கே உறவுகள் எங்கே?” “நிதி வேண்டாம்; நீதியே வேண்டும்”

## வவுனியாவிலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்

வவுனியா, டிசெ. 01

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தால் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டவர்கள் அரசுக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர். அத்துடன் தமக்கான நீதியையும் வலியுறுத்தினர்.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், ‘எங்கே எங்கே உறவுகள் எங்கே?’, ‘நிதி வேண்டாம் நீதியே வேண்டும்’, ‘ஓ.எம்.பியைத் திணிக்காதே’, ‘பாடசாலை சென்ற மாணவர்கள் எங்கே’, ‘அரசின் பொறுப்பற்ற பதில்களைக் கண்டிக்கின்றோம்’ போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பியிருந்தனர். (இ)

## வெருகல் பிரதேச சபை பட்ஜெட் ஒரு மேலதிக வாக்கால் தோல்வி

திருகோணமலை, டிசெ. 01

வெருகல் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டத்தின் முதலாம் வாசிப்பு ஒரு மேலதிக வாக்கால் தோல்வி கண்டது.

இந்நிலையில், இரண்டாம் வாசிப்பை எதிர்வரும் 10ஆம் திகதி நடத்த சபை தீர்மானித்துள்ளது.

13 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 7 ஆசனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிகொண்டதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களை மட்டும் கொண்ட பிரதேச சபையாக இது இருக்கின்ற போதிலும் தேசிய சிங்களக்கட்சிகளும் ஆசனங்களைப் பெற்றுள்ளன.

அத்துடன், வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல சபைகளில் ஆட்சி அமைத்தாலும் பிற கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியாக ஆட்சியமைத்த சபை இதுவாகும்.

இப்படிப்பட்ட பெருமைகளைக் கொண்ட சபையின் பாதீடு அதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இருவர் எதிராக வாக்களித்தமையால் இந்த நிலை சபைக்கு ஏற்பட்டுள்ளது. (இ)

## கிளிநொச்சியிலும் உறவுகள் போராட்டம்

கிளிநொச்சி, டிசெ. 01

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் மாதத்தில் இறுதியாக வரும் 30 திகதிகளில் நடத்திவரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் கிளை அலுவலகம் முன்பாக நேற்று நடைபெற்றது.

குறித்த போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். இவர்கள் நீதி வேண்டி கோஷங்களை எழுப்பினர். (இ)







## விடுதி சுற்றிவளைப்பு; மூன்று பேர் கைது!

கொழும்பு, டிச. 01

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுவ பகுதியில் ஆயுள்வேத உடற்பிடிப்பு நிலையம் என்ற பெயரில் நடத்திச் செல்லப்பட்ட விபச்சார விடுதி பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பில் விடுதியின் முகாமையாளர் மற்றும் இரண்டு பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

30, 31 மற்றும் 37 வயதுகளையுடைய சந்தேகநபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## வலிகாமம் வடக்கு ‘பட்ஜெட்’ ஏகமனதாக நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 01

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தவிசாளர் சோ.சுகிர்தனால் நேற்று சபையில் முன்வைக்கப்பட்டது.

39 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் நேற்று கலந்துகொண்ட 29 உறுப்பினர்களும் வரவு - செலவு திட்டத்துக்குத் தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

நேற்றைய சபை அமர்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 7 உறுப்பினர்களும், தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலா உறுப்பினரும் கலந்துகொள்ளாத அதேவேளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் புதிய உறுப்பினர் ஒருவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை.



வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 17 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 8 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 6 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா 2 உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ - 03)

ஈழநாடு
Eelanadu

# தீர்வு வழங்கப்படாவிட்டால் பதவியை இழக்க நேரிடும்

## சுகாதார அமைச்சருக்கு எச்சரிக்கை விடுக்கும் சுகாதாரப் பரிசோதகர்கள்



கொழும்பு, டிச. 01

"எமது கோரிக்கைகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படாவிட்டால் சுகாதார அமைச்சர் தனது அமைச்சுப் பதவியை இழக்க நேரிடும்."

- இவ்வாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பிரச்சினை எல்லை மீறுவதற்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக சுகாதாரத் துறையில் நிலவும் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

நேற்றுக் காலை கொழும்பு விகாரமஹா தேவி பூங்காவுக்கு அருகில் இந்த எதிர்ப்பு வாகனப் பேரணி ஆரம்பமானது. (இ)

## ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு சபையில் தமிழ் எம்.பிக்கள் கண்டனம்!

கொழும்பு, டிச. 01

முல்லைத்தீவில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவர் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் எம்.பிக்கள் சபையில் கடும் கண்டனங்களை வெளியிட்டனர்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற மின்சக்தி அமைச்சு, வலுசக்தி அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பிக்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பியான செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் தமது கடுமையான கண்டனங்களை வெளியிட்டனர்.

கடந்த சனிக்கிழமை காலை முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளரான விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் என்பவர் முள்ளியவாய்க்கால் கிழக்கில் காலை செய்தி சேகரிப்புக்காகச் சென்று அங்கிருந்து வீடு திரும்பிய நிலையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் பெயர்ப்பலகையை ஒளிப்படம் எடுத்துள்ள போது அந்தப் பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட நான்கு இராணுவத்தினர் குறிப்பிட்ட ஊடகவியலாளர் மீது முள்ளுக்கம்பி சுற்றப்பட்ட பச்சைப் பனைமட்டையால் தாக்குதல் நடத்தியமை மிருகத்தனமானது எனவும் இவர்கள் குற்றஞ்சாட்டினர்.

அத்துடன் தாக்குதல் நடத்திய 3 இராணுவத்தினர் கண்துடைப்புக்காகக் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில்கூட ஆஜர்செய்யப்படாது பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு விட்டனர் என்று குற்றஞ்சாட்டிய தமிழ் எம்.பிக்கள், நாட்டில் இராணுவ ஆட்சி நடப்பதற்கு இந்தத் தாக்குதல் சிறந்த உதாரணம் எனவும் குறிப்பிட்டனர்.




## மரண அறிவித்தல்



மலர்வு 10 - 08 - 1931

உதிர்வு 26 - 11 - 2021

### திருமதி ஜானகி புஷ்பராஜா

யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கனடா scarborough வை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட ஜானகி புஷ்பராஜா அவர்கள் 26-11-2021 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ராசையா - சின்னதங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ராசையா புஷ்பராஜா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், பவளம், ஞானம், தம்பிஐயா, ஏகாம்பரம், அன்னரத்தினம், பொன்னுதுரை, பொன்னம்பலம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நளினி (Alberta), பவானி (இலங்கை), ஷாமினி, மனோராஜ், பாலகுமார், ராஜ்குமார், யுமானி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராஜ்குமார் (Alberta), ராஜகாரியர்(இலங்கை), காலஞ்சென்ற கதிர்காமநாயகன், மாலினி, பூமாதேவி, லசந்தி, குற்றாலநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,பிரியதர்ஷினி-ரமணா, சுரேஷ் - விசாயினி, பிரதீபன்- ரக்ஷிதா, பிரஷாந்தன், அனோஜன் - நட்டாஷா, நிரோஜினி, மரினா, அபிசின்ட் - கஸ்தூரி, விபிஷினி - கோகுல், கிஷோரி, வர்ஜினி - விமல், சரண்யா - பாலாஜி, தர்மினி ஆகியோரின் அன்புப் பேத்தியும்,சாயிரா, சாயிஷா, ஆர்த்தி, கேஷா, டினோஷ், ஆர்யா, சயன், டியா வான்யா, ரியோன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

**பார்வைக்கு**
Saturday, 04 Dec 2021 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**தகனம்**
Sunday, 05 Dec 2021 6:00 AM - 8:15 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**மனோ - மகன்**
Mobile : +16479887810

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



மலர்வு 05 - 07 - 1934

உதிர்வு 27 - 11 - 2021

### மாப்பாணர் துரைராஜா

யாழ். மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், லண்டன் Hainault ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மாப்பாணர் துரைராஜா அவர்கள் 27-11-2021 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாப்பாணர் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சிவபாக்கியம் - கந்தையா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயராணி அவர்களின் அன்புக் கணவரும், குகன், குமணன், வாசுகி ஆகியோரின் பாசமிகு தந்தையும்,சுகன்யா, லஷ்மி, திருக்குமரன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,சேயோன், அனிஷ், கோபிதன், பிரவீன், சஞ்சிதன் ஆகியோரின் பாசமிகு பேரனும், செல்வராஜா, ஞானமணி, இராசமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சரஸ்வதி, ஆலாலசுந்தரம், கந்தையா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**குகன் - மகன்**
Mobile : +447930344183

தகவல்:
**குடும்பத்தினர்.**









இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மிருதன்,செக்க சிவந்த வானம் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
7.00 மணி : பாரதீ



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்-அருட்தந்தை அமிர்த ஜெயசேகரம்



9.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## சக்தி ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம் திங்கள்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு